# குடும்பம்

வழிகாட்டிப் புத்தகம்

# குடும்பம்

வ ழி கா ட் டி ப் பு த் த க ம்

பிற்காலப் பரிசுத்தவான்களின்
இயேசு கிறிஸ்து சபையால் பிரசுரிக்கப்பட்டது
சால்ட் லேக் சிட்டி, யூட்டா

© *2002* by Intellectual Reserve, Inc
எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன
இந்தியாவில் அச்சிடப்பட்டது

ஆங்கில அங்கீகாரம்: 2/06
மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 2/06
*Family Guidebook* ன் மொழிபெயர்ப்பு
Tamil

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *"குடும்பம்: உலகுக்கு ஓர் பிரகடனம்"* | iv |
| *குடும்ப அமைப்பும் நோக்கமும்* | *1* |
| *வீட்டில் சுவிசேஷத்தைப் போதித்தல்* | *6* |
| *குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்* | *17* |
| *தலைமைக்கான பயிற்சி* | *22* |
| *இல்லத்தில் ஆராதனை நடத்துதல் (புறம்பான பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்காக)* | *23* |
| *ஆசாரியத்துவ நியமங்களும் ஆசீர்வாதங்களும்* | *26* |
| *சபைக்குரிய பொருட்களைப் பெறுதலும் குடும்ப வரலாற்றைப்பற்றிய தகவல்களைக் கண்டுபிடித்தலும்* | *37* |

# “குடும்பம்: உலகுக்கு ஒரு பிரகடனம்”

*1995ல் பிரதான தலைமையும் பன்னிரு அப்போஸ்தலர் குழுமமும் “குடும்பம்: உலகுக்கு ஓர் பிரகடனம்” வெளியிட்டனர். இந்தப் பிரகடனமானது சபை வரலாறு முழுவதிலும் தீர்க்கதரிசிகள் திரும்பத் திரும்ப கூறியிருக்கிற கோட்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் அறிவிப்பும் மறுஉறுதிப்படுத்தலுமாகும். இது ஒவ்வொரு குடும்பத்தினுடைய நல்வாழ்வு மற்றும் சந்தோஷத்துக்கு இன்றிமையாத கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது. குடும்ப அங்கத்தினர்கள் இந்தப் பிரகடனத்தைப் படித்து அதன் போதனைகளின்படி வாழவேண்டும்.*

---

“ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயுள்ள திருமணமானது தேவனால் நியமிக்கப்பட்டதுஎன்றும் சிருஷ்டிகரின் பிள்ளைகள் நித்திய நிர்ணயத்தை அடையும்படியாக அவரது திட்டத்துக்கு குடும்பம் மையமாக இருக்கிறது என்றும் பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் பிரதான தலைமையும் பன்னிரு அப்போஸ்தலர் குழுமமாகிய நாங்கள் பயபக்தியுடன் பிரகடனம் செய்கிறோம்.

“எல்லா மானிடராகிய ஆணும் பெண்ணும் தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் பரலோக பெற்றோரின் நேசமான ஆவியின் குமாரன் அல்லது குமாரத்தியாயிருக்கின்றனர் மற்றும் ஒவ்வொருவருக்கும் தெய்வீக இயல்பும் நிர்ணயமும் உண்டு. பாலினம் என்பது முன்னிருந்த நிலை அநித்திய நிலை மற்றும் நித்தியம் ஆகியவைகளுக்கான தனித்த அடையாளமும் நோக்கும் கொண்ட ஒரு அத்தியாவசிய குணாதிசயமாகும்.

“முன்னிருந்த நிலை இராஜ்யத்தில் ஆவி குமாரர்களும் குமாரத்திகளும் தேவனை தங்களது நித்திய பிதா என்றறிந்து ஆராதனை செய்து, சம்பூரணத்திற்கு ஏதுவாக முன்னேற அவருடைய பிள்ளைகள் ஒரு இயல்பான சரீரத்தையும் பூலோக அனுபவத்தையும் பெறும்படியாகவும், முடிவாக நித்திய ஜீவியத்தின் வாரிசாக அவனுடைய, அவளுடைய தெய்வீக நிர்ணயத்தை உணரும்படியாகவும் அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். அந்த மகிழ்ச்சிகரமான தெய்வீக திட்டமானது, குடும்ப உறவுகளை கல்லறைக்குப் பின்னரும் அழியாததாய் நீடித்திருக்கச் செய்கிறது. பரிசுத்த ஆலயங்களில் செய்யப்படுகிற பரிசுத்த நியமங்களும் உடன்படிக்கைகளும் தனிநபர்கள் தேவ சந்நிதிக்குத் திரும்ப குடும்பங்கள் நித்தியமாய் இணைக்கப்படவுமான சாத்தியத்தை ஏற்படுத்துகின்றன.

“தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுத்த முதல் கட்டளையானது, கணவனும் மனைவியுமாக பெற்றோரத்துவத்துக்குரிய அவர்களுடைய

சத்துவத்தைப்பற்றியதாயிருந்தது. அவரது பிள்ளைகள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பவேண்டும் என்ற தேவனுடைய கட்டளை இன்னும் நடைமுறையிலுள்ளது என நாங்கள் அறிவிக்கிறோம். ஜனிப்பிக்கிற பரிசுத்த வல்லமைகள் சட்டப்படி கணவன் மனைவியாக திருமணம் செய்துகொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மட்டுமே பிரயோகிக்கப்படவேண்டும் என தேவன் கட்டளையிட்டிருக்கிறார் என்று நாங்கள் மேலும் அறிவிக்கிறோம்.

“அநித்திய ஜீவனை உண்டுபண்ணுகிற வழிவகை தெய்வீக நியமித்தலாய் இருக்கிறதென்று நாங்கள் அறிவிக்கிறோம். வாழ்க்கையின் பரிசுத்தத்தையும் தேவனின் நித்திய திட்டத்தில் அதன் முக்கியத்துவத்தையும் நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

“கணவனும் மனைவியும் ஒருவரோடொருவருக்கு மற்றும் தங்களது பிள்ளைகளுக்கு அன்பு செலுத்தி பராமரிப்புக்கும் உச்சித பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். ‘பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்’ (சங்கீதம் 127:3). அன்பிலும் நீதியிலும் தங்கள் பிள்ளைகளை வளர்க்கவும் அவர்களது சரீர மற்றும் ஆவிக்குரிய தேவைகளை அளித்திடவும் ஒருவருக்கொருவர் நேசித்து பணிவிடை செய்யவும் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவும், அவர்கள் எங்கு இருந்தாலும் சட்டத்திற்கு கீழ்ப்படிகிற பிரஜைகளாக இருந்திடவும் வேண்டுமென அவர்களுக்குப் போதித்திடும்படியான பரிசுத்த கடமை பெற்றோர்களுக்கு உண்டு. இந்த பொறுப்புகளின் நிறைவேற்றத்தினிமித்தம் கணவன் மனைவிமார்கள் தாய், தகப்பன்மார்கள் தேவனுக்கு முன்பு பொறுப்பேற்க வேண்டியவர்களாவார்கள்.

“குடும்பம் தேவனால் நியமனம் செய்யப்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான திருமணம் அவரது நித்திய திட்டத்திற்கு அவசியமான ஒன்றாகும். திருமண பந்தங்களினுள்ளே பிறப்பதற்கும் முழு கற்புடனே திருமண வாக்குத்தத்தங்களை கனம்பண்ணுகிற தகப்பன் மற்றும் தாயினால் வளர்க்கப்படுவதற்கும் பிள்ளைகள் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின், குடும்ப வாழ்க்கை போதனைகளின் மீது ஸ்தாபிக்கப்படும்போது அதில் சந்தோஷத்தை அநேகமாக பெறக்கூடும். வெற்றிகரமான திருமணங்களும் குடும்பங்களும் விசுவாசம், ஜெபம், மனந்திரும்புதல், மன்னிப்பு, மரியாதை, அன்பு, தயை, வேலை, மற்றும் நல்ல பொழுது போக்கு நிகழ்ச்சிகள் போன்ற கொள்கைகளின்மேல் நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகிறது. தெய்வீக திட்டத்தின்படி தகப்பன்மார்கள் தங்கள் குடும்பங்களை அன்புடனும் நீதியுடனும் தலைமை தாங்கி தங்கள் குடும்பங்களுக்கு வேண்டிய பாதுகாப்பையும் அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை போஷித்து வளர்க்க

*பிரதான பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்தப் பரிசுத்த பொறுப்புக்களில் தாய் தகப்பன்மார் சமமான வாழ்க்கைத் துணைவர்களாக ஒருவருக்கொருவர் உதவிட கடமைப்பட்டிருக்கிறார்கள். ஊனம் மரணம், அல்லது பிற சூழ்நிலைகள் தனிப்பட்ட இசைவுகளை தேவையாக்கலாம். உறவினர்கள் அக்குடும்பங்களுக்கு தேவைப்படும்பொழுது உதவி அளிக்கவேண்டும்.*

*“கற்புடமையின் உடன்படிக்கைகளை மீறுகிற, துணையையோ அல்லது பிள்ளைகளையோ நிந்தனை செய்கிற, அல்லது குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றத் தவறுகிற தனி நபர்கள், தேவனுக்கு முன்பாக ஒருநாள் பொறுப்பேற்பவர்களாய் நிற்பார்கள் என்று நாங்கள் எச்சரிக்கிறோம். முற்காலம் மற்றும் தற்காலத் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட அழிவுகளை தனிநபர்கள்மீதும், சமுதாயங்கள்மீதும், தேசங்கள்மீதும் குடும்பச் சிதைவுகள் கொண்டுவரும் என்று நாங்கள் மேலும் எச்சரிக்கிறோம்.*

*“சமுதாயத்தின் அடிப்படை அங்கமாக குடும்பத்தைப் பராமரித்து பலப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்ட அத்திட்டங்களை செயல்படுத்தும்படி எங்குமுள்ள பொறுப்புள்ள பிரஜைகளையும் அரசாங்க அதிகாரிகளையும் நாங்கள் அழைக்கிறோம் (Ensign,* Nov. *1995, 102).*

# குடும்ப அமைப்பும் நோக்கமும்



## *அமைப்பு*

*குடும்பம் என்பது பிற்காலப் பரிசுத்த வான்களின் இயேசு கிறிஸ்து சபை யில் பரிசுத்தமானதும் இக்காலத்துக் கும் நித்தியத்துக்குமான உள்ள மிக முக்கிய சமுதாய அங்கமாகும். தேவன் அவரது பிள்ளைகளுக்கு சந்தோஷத்தைக் கொண்டுவரவும் ஓர் அன்பான சூழலில் சரியான கொள்கைகளைக் கற்க சாத்தியத்தை ஏற்படுத்தவும் நித்திய ஜீவனுக்காக அவர்களை ஆயத்தப்படுத்தவுமே குடும்பங்களை ஸ்தாபித்தார்.*



*சுவிசேஷக் கொள்கைகளை கற்கவும், போதிக்கவும். செயல்படுத்தவும்கூடிய சிறந்த இடம் இல்லமே. இங்கே தான் ஒவ்வொருவரும் தங்களது உணவு, உடை, உறைவிடம் மற்றும் பிற தேவைகளை சம்பாதிக்க கற்றுக் கொள்கிறார்கள். தந்தையும் தாயும் சமபங்குதாரர்களாக இருந்து குடும் பத்தில் ஒவ்வொரு அங்கத்தினருக் கும் உதவ வேண்டும்:*

- சத்தியத்தை நாடி தேவனில் விசுவா சத்தை விருத்தி செய்யுங்கள்
- பாவங்களுக்காக மனந்திரும்பி பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நா னம் பெற்று பிற்காலப் பரிசுத்த வான்களின் இயேசு கிறிஸ்து சபை அங்கத்தினராகி பரிசுத்த ஆவியா னவரை பெற்றுக்கொள்ளுங்கள்.
- தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, கருத்துடன் வேதங்க ளைப் படித்து, தினமும் தனிஜெபம் செய்து, பிறருக்குச் சேவை செய் யுங்கள்.
- பிறரோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- ஆலயத்தில் தரிப்பிக்கப்பட்டு ஒரு தகுதியுள்ள வாழ்க்கைத் துணை யோடு நித்தியத்துக்கு திருமணம் செய்து கொண்டு, குடும்பத்திற்காக ஒரு மகிழ்ச்சியான இல்லத்தை உருவாக்கி அன்பாலும், தியாகத் தாலும், குடும்பத்தைத் தாங்குங்கள்.



- மரித்த பூர்வத்தாரைப்பற்றிய குறிப் புகளைத் தேடி அவர்களுக்காக ஆலய நியமங்களை நிறைவேற்ற உதவுங்கள்.



- ஆவிக்குரிய, சமூக, சரீர மற்றும் மனோரீதியான ஆரோக்கியத்திற் குத் தேவையுள்ள போஷாக்கை அளிக்க உதவுங்கள்.

தகப்பன் குடும்பத்துக்கு தலைமை தாங்கி பிள்ளைகளுக்கு போதிக்கவும் குடும்பத்திற்கான வாழ்க்கைத் தேவை களைச் சம்பாதிக்கவும் அவர் பொறுப் புள்ளவராயிருக்கிறார். சபையில் தகுதியுள்ளவராயும் பாத்திரவானாயு முள்ள ஒரு தகப்பன் தேவனின் நாமத் தினால் செயல்படும் வல்லமையும் அதிகாரமும்கொண்ட ஆசாரியத்து வத்தைத் தரித்துக்கொள்ளும் சந்தர்ப் பம் பெற்றிருக்கிறார். இந்த வல்லமை யாலும் அதிகாரத்தாலூம் தகப்பன் அவரது குடும்பத்தின் ஆசாரியத்துவ தலைவராகிறார். நம் பரலோகப் பிதாவின் பிரசன்னத்துக்குத் திரும்பிட ஆயத்தம் செய்வதில் அவர் தனது குடும்பத்தை வழிநடத்துகிறார். அவ ரது மனைவி அவரது மிகமுக்கியமான கூட்டாளியாகவும், வாழ்க்கைத் துணையாகவும் ஆலோசகராகவுமிருக் கிறார். குடும்பத்தையும் இல்லத்தை யும் பாதிக்கக்கூடிய எல்லாக் காரியங் களிலும் கணவனும் மனைவியும் ஒன் றாய்ச் சேர்ந்து ஆலோசிக்கவேண்டும்.

*தகப்பன் தனது குடும்பத்தின் ஆவிக்குரிய தேவைகளை அளிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் அவர்கள் போதிக்கப்படுகிறார்களா என்று அவர் பார்க்க வேண்டும். மேலும் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அவர்களுக்கு உதவவும் அவர்களை ஊக்குவிக்கவும் தன்னால் முடிந்தவற்றை எல்லாம் அவர் செய்யவேண்டும்.*

*ஆசாரியத்துவத்தைத் தரித்திருக்கிற ஒரு தகப்பன் தனது குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதிக்கவும் அவர்களது ஆவிக்குரிய தேவைகளை அளிக்கவும் முடியும். தகுதியான ஆசாரியத்துவ அதிகாரத்தின் மூலமாகவும் அவரது ஆசாரியத்துவத் தலைவரிடமிருந்து பெற்றுள்ள அதிகாரம் மூலமாகவும் தகப்பன் செய்யக்கூடியவையாவன:*

1. *பிள்ளைகளுக்கு பெயர் சூட்டி ஆசீர்வதிக்கலாம்*
2. *பிள்ளைகளுக்கு (மற்றும் பிறருக்கும்) ஞானஸ்நானம் கொடுக்கலாம்.*
3. *பிள்ளைகளை (மற்றும் பிறரை) சபையின் அங்கத்தினராக திடப்படுத்தி அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை அருளலாம்.*
4. *அவரது குமாரர்கள்மேல் (மற்றும் பிறர்மேல்)ஆசாரியத்துவத்தை அருளி ஆசாரியத்துவ அலுவலுக்கு அவர்களை நியமிக்கலாம்.*
5. *திருவிருந்தை ஆசீர்வதித்துப் பரிமாறலாம்.*
6. *கல்லறைகளை பிரதிஷ்டை செய்யலாம்.*

*தனது ஆசாரியத்துவ தலைவரிடமிருந்து அதிகாரம் பெறாமலேயே மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தைப் பெற்ற ஒரு தகப்பன் எண்ணெயை பரிசுத்தப்படுத்தலாம், தனது குடும்ப அங்கத்தினர் மற்றும் பிறரை அவர்கள் சுகவீனமாயிருக்கையில் ஆசீர்வதிக்கலாம் மற்றும் தேவை ஏற்படும் நேரங்களிலும் அவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களைக் கொடுக்கலாம் (ஆசாரியத்துவ நியமங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை நிறைவேற்றுதலுக்கான அறிவுரைகளை இந்த வழிகாட்டிப் புத்தகத்தில் 18-25 ஆம் பக்கங்களில் பார்க்கவும்).*

*தனது குடும்பம் மூன்று அடிப்படை கடமைகளில் தீவிரமாய் ஈடுபடுகிறது என்பதை தகப்பன் கவனித்திடவேண்டும்:*

1. *தனிப்பட்ட மற்றும் குடும்ப ஆவிக்குரிய மற்றும் லௌகீக ஆயத்த நிலை.*
2. *சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்.*
3. *வாழ்பவருக்கும் மரித்தோருக்குமுரிய ஆலய நியமங்கள் மற்றும் குடும்ப வரலாறு.*

*தனது கணவனுக்கு ஒரு வாழ்க்கைத் துணையாகவும் ஆலோசகராகவும் தாய் இருக்கிறாள். தேவனின் பிரமாணங்களை தங்களின் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க அவனுக்கு உதவுகிறாள். தகப்பன் இல்லாத வீட்டில்,*

தாயானவளே குடும்பத்திற்குத் தலைமை ஏற்கிறாள்.

தகப்பனும் தாயும் ஒரே நோக்கமு டையவர்களாயிருக்கவேண்டும். குடும்ப அங்கத்தினர்கள் எல்லோரை யும் நமது பரலோக பிதாவிடம் திரும்பிச் சென்றிட ஆயத்தப்படுத்து வதே அவர்களது இலக்காக இருக்க வேண்டும். இந்த இலக்குக்காக அவர்கள் செயல்படுகிறபோது அவர்கள் ஒன்றுபட்டிருக்கவேண்டும். அவர்களுடைய குடும்பங்களைப் பராமரித்துக் கொள்ளவும், போதி க்கவும், தகப்பனுக்கும் தாய்க்கும் உதவவே கர்த்தர் சபையை ஏற்படுத் தியுள்ளார்.

பிள்ளைகள் குடும்பங்களுக்குள் வரு கிறபொழுது பெற்றோர்கள், அவர் களை நேசிக்கவும், சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதிக்கவும், மற்றும் நீதியாய் ஜீவிப்பதில் எடுத்துக்காட்டு களாக இருந்திடவும் வேண்டும். பிள் ளைகள் தேவனுடைய கட்டளைக ளைக் கற்று, கைக்கொள்ள வேண் டும். அவர்கள் தங்கள் பெற்றோர்க ளுக்குக் கீழ்ப்படிந்து அவர்களை கனம் பண்ணவேண்டும்

சபையின் பலமானது, இயேசு கிறிஸ் துவின் சுவிசேஷத்தின்படி வாழ்கிற குடும்பங்கள் மற்றும் தனிநபர்களைச் சார்ந்திருக்கிறது. ஒரு குடும்பம் சுவி சேஷத்தின் ஆசீர்வாதங்களை அனுப விப்பது, பெரும்பாலும் எந்த அளவிற் குத் திறமையாய் தகப்பனும் தாயும் பெற்றோராக தங்களின் அடிப்படை கடமைகளைப் புரிந்துகொண்டு செயல்படுவதைப் பொறுத்ததாக இருக்கிறது. இந்த மேலான அடிப் படை கடமைகளில் அவர்களை மீறிய அல்லது அவர்கள் மனந்தளரக் கூடிய அல்லது உதாசீனப்படுத்தக்கா ரணமான நிகழ்ச்சிகளையோ பொறுப்புக்களையோ , தாய் தகப் பன்மார்களுக்குக் கொடுக்க சபை ஒருபோதும் கருதுவதில்லை.

## நோக்கம்

பரலோகப் பிதா நம்மை நேசிக்கிறப டியால் அவரைப்போல நாமும் மேன்மையடைய வேண்டுமென அவர் விரும்புகிறார். நமக்கு உத விட, சத்தியத்தின் தெய்வீக நியாயப் பிரமாணங்களை அடிப்படையாக வைத்து, நாம் பின்பற்றும்படி ஒரு திட்டத்தை அவர் நமக்குக் கொடுத் திருக்கிறார். அந்தத் திட்டத்தைக் குறித்து கற்று, உண்மையாய் அதைப் பின்பற்றுகிறவர்கள் ஓர் நாள் நமது பரலோக பிதாவைப்போல் மாறி, அவர் ஜீவிக்கிற அவ்வித வாழ்வை அனுபவிப்பார்கள்.

நாம் பரலோகத்தைவிட்டு பூமிக்கு வருவதே திட்டத்தின் ஒரு பகுதியாயி ருந்தது. இங்கே நாம் ஒவ்வொருவ ரும் ஒரு இயல்பான சரீரத்தைப் பெற்று, அனுபவங்கள் வாயிலாகக் கற்று, தேவனுடைய பிரசன்னத்தில் மீண்டும் வாழ நம்மையே நாம் தகுதி யுள்ளவர்களாய் நிரூபிக்கிறோம். அவரது நியாயப்பிரமாணங்களைக் கைக்கொண்டிட சுயமாய் தெரிந்தெ டுத்தல் மூலம் நம்மையே நாம்

*தகுதியுள்ளவர்களாய் நிரூபிக்கிறோம் (ஆபிரகாம் 3:23-25; 2நெப்பி 2:27 பார்க்கவும்).*

*அவரோடு வாழ்வதற்கு நம்மையே நாம் ஆயத்தமாக்கிட நமக்கு உதவும்படி நமது பரலோகப் பிதா, நம்மை குடும்பங்களாக ஒழுங்குபடுத்தி அமைத்திருக்கிறார். பரிசுத்த நியமங்கள் மற்றும் உடன்படிக்கைகள் மூலம் நம் குடும்பங்கள் நித்தியமாய் இணைந்திருக்கமுடியும்.*

# வீட்டில் சுவிசேஷத்தைப் போதித்தல்



## பாசத்துடனும் அன்புடனும் பிள்ளைகளுக்குப் போதித்தல்

தங்களுடைய பிள்ளைகளுக்கு சுவிசே ஷத்தைப் போதித்திட வேண்டுமென கர்த்தர் பெற்றோர்களுக்குக் கட்ட ளையிட்டிருக்கிறார். அவர் சொன்ன தாவது:

“சீயோனிலோ அல்லது அமைக்கப் பட்ட சீயோனின் எந்த பிணையங்க ளிலோ பெற்றோருக்குப் பிள்ளைகள் இருந்து அவர்களுக்கு மனந்திரும் புதலின் கோட்பாடுகள், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ் துவில் விசுவாசம், எட்டு வயதாகிற பொழுது ஞானஸ்நானம் மற்றும் கைகளை வைப்பதன்மூலம் பரிசுத்த ஆவியின் வரம் ஆகியவற்றைக் குறித்து புரிந்துகொள்ளத்தக்கதாக போதிக்கத் தவறினால் அந்த பாவம் பெற்றோரின் தலைகளின்மேல் சுமரும்.

“ஏனெனில் இதுவே சீயோனிலும் அல்லது அதனுடைய ஒழுங்கமைக் கப்பட்ட வேறு எந்த பிணையங்களி லுள்ள குடிகளுக்கான நியாயப்பிர மாணமாயிருக்கும்.

“அவர்களின் பிள்ளைகள் எட்டு வய தாகிறபோது தங்களின் பாவங்களின் மன்னிப்புக்காக ஞானஸ்நானம் கொடுக்கப்பட கைகளை வைத்த லைப் பெறவேண்டும்.

“மேலும் பெற்றோர்கள் தங்கள் பிள் ளைகளுக்கு ஜெபிக்கவும், கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய் நடக்கவும்

*போதிக்கவேண்டும்” (கோ.உ 68:25-28 பார்க்கவும்).*

*“கர்த்தருக்கேற்ற போதனையிலும் சிட்சையிலும் (தங்கள் பிள்ளைகளை) வளர்ப்பீர்களாக” (எபேசியர் 6:4) என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் ஆலோசனையை நினைவுகூர்ந்து பெற்றோர்கள் பாசத்துடனும் அன்புடனும் கற்றுக்கொடுக்கவேண்டும்.*

## குடும்ப வேத வாசிப்பு

*நாம் பரலோகப் பிதாவைப்போல் மாறி, அவர் ஜீவிக்கிற அவ்விதமான வாழ்க்கையாகிய, அந்த ஆசீர்வாதத்தை அது அடிப்படையாயுள்ள நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்ளுவதால் மட்டுமே அனுபவிக்கமுடியும் (கோ.உ 130:20-21 பார்க்கவும்). அந்த பிரமாணங்களின்படி நாம் வாழ்வதற்கு முன்பதாக, அவைகள் என்னவென்று நாம் அறியவேண்டும். “ஒரு மனிதன் அறியாமையிலே இரட்சிக்கப்படுவது கூடாததாயிருக்கிறது” (கோ.உ 131:6 பார்க்கவும்).*

*இயேசு கிறிஸ்து நமது தலைவரும் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவருமாயிருக்கிறார். நாம் கைக்கொள்ள வேண்டிய நியாயப்பிரமாணங்களையும் வழியையும் அவர் அறிவார். மேலும் அவரைப் பின்பற்றும்படி நம் ஒவ்வொருவரையும் அவர் அழைத்திருக்கிறார். அவர் சொன்னதாவது, “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோவான் 14:6).*

*பரலோகப் பிதாவைப்போல் மாறவும் அவரிடம் திரும்பிடவும் நாம் இயேசுவின் போதனைகளைக் கற்று அவைகளைப் பின்பற்றவேண்டும். இயேசு கிறிஸ்துவின் கட்டளைகள், போதனைகள் மற்றும் ஜீவியத்தைப் பற்றி கற்றுக்கொள்ள உதவிட நமக்கு வேதங்கள் இருக்கின்றன.*

*வேதாகமம், மார்மன் புத்தகம், கோட்பாடும் உடன்படிக்கைகளும் மற்றும் விலையேறப் பெற்ற முத்து ஆகிய நான்கு புத்தகங்களை, வேதங்கள் என சபை ஏற்றுக்கொள்கிறது. அவைகள் சுவிசேஷத்தின் நியாயப்பிரமாணங்களையும் எல்லா எண்ணங்களையும் செயல்களையும், போதனைகளையும் நாம் அளவிடக்கூடிய தரங்களையும் விவரிக்கின்றன. அவைகள் இயேசு கிறிஸ்துவின் ஜீவியம் மற்றும் போதனைகளைப்பற்றி நாம் கற்றுக்கொள்ள உதவி தேவனில் விசுவாசம் கொண்டு, அவரது கட்டளைகளைக் கைக்கொண்ட மக்களின் எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன.*

*வசனங்களை ஆராய்ந்து படிக்க வேண்டுமென இயேசு நமக்கு போதித்தார் (யோவான் 5:39; 3நெப்பி 23:1; கோ.உ88:118).*

*கர்த்தரின் போதனைகளைக் கற்கவும், பின்பற்றவும் குடும்பங்கள் ஒவ்வொரு நாளும் ஒன்றாய்ச் சேர்ந்து வேதங்களை ஒழுங்காகப் படிக்க வேண்டும். வேதங்களை வாசிக்கவும் கலந்துரையாடவும், அவர்களது குடும்பங்களை ஒவ்வொரு நாளும் வழக்கமான நேரத்தில் பெற்றோர் ஒன்று*

கூட்டவேண்டும். வாசிக்க இயன்ற ஒவ்வொரு குடும்ப அங்கத்தினருக்கும் வேதங்களிலிருந்து வாசிக்க வாய்ப்பு கிடைக்கவேண்டும்.



வேதவாசிப்பு தொடங்குவதற்கு முன்பதாக, வாசிப்பவற்றை புரிந்து கொண்டு அதைக் குறித்து சாட்சி பெற்றுக்கொள்ளும்படி ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்திட குடும்ப அங்கத்தினர் ஒருவர் பரலோகப் பிதாவிடம் வேண்டி, ஜெபத்தை ஏறெடுக்கலாம். வேதவாசிப்பைத் தொடர்ந்து குடும்பங்கள் தங்கள் குடும்ப ஜெபத்தைச் செய்திட விரும்பலாம்.

குடும்பங்கள் வசனங்களை வாசித்து, தியானிக்கும் பொழுது அவர்கள் இரட்சகரைப்போல் பெரிதும் மாறிட, விரும்புவர் மேலும் தங்களது ஜீவியங்களில் பெரிதான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் காண்பர்.

## தனிப்பட்ட மற்றும் குடும்ப ஜெபங்கள்

நாம் ஒவ்வொருவரும் நமது பரலோகப் பிதாவிடம் ஜெபத்தின் மூலமாய் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். அவர் நம்மை நேசிக்கிறார் மற்றும் நாம் அவரிடம் பேச வேண்டுமென அவர் விரும்புகிறார். நமது ஆசீர்வாதங்களுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தவும், அவரது உதவி மற்றும் வழிநடத்துதலுக்காக வேண்டிட வேண்டுமெனவும் அவர் விரும்புகிறார். நாம் கேட்கும்போது அவர் நமக்கு உதவுவார். அநேக ஜெபங்கள் நாம் முழங்காற்படியிட்டிருக்கும் பொழுதோ, அமர்ந்திருக்கும் பொழுதோ அல்லது நின்றுகொண்டிருக்கும்பொழுதோ நம் தலைகள் தாழ்த்தப்பட்டு கண்கள் மூடப்பட்டதாக ஏறெடுக்கப்படுகின்றன.

நாம் ஜெபிக்கும்பொழுது நினைவில் கொள்ளவேண்டிய நான்கு முக்கிய கொள்கைகளாவன:

1. நாம் பரலோக பிதாவிடம் பேசுகிறதின் மூலம் நாம் நம்முடைய ஜெபங்களை ஆரம்பிக்கிறோம்: “எங்கள் பரலோக பிதாவே...”
2. நமது பரலோக பிதா நமக்கு கொடுக்கிற காரியங்களுக்காக அவருக்கு நாம் நன்றி கூறுகிறோம்: “நாங்கள் உமக்கு நன்றிகூறுகிறோம்...”
3. நமக்கு வேண்டிய உதவிக்காக அவரிடம் கேட்கிறோம்: “நாங்கள் உம்மிடம் கேட்கிறோம்...”
4. இரட்சகரின் நாமத்தில் நமது ஜெபத்தை நிறைவு செய்கிறோம்: “இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென். ”

நமது ஜெபங்கள் எப்பொழுதுமே இந்த எல்லா நான்கு படிகளையும் பின்பற்றவேண்டுமென்பதில்லை. ஆனால் இவைகளை மனதில் கொண்டிருப்பது ஜெபிக்கக் கற்றுக்கொள்ள நமக்கு உதவும். முதல் மற்றும் கடைசி அடிகளைக் கொண்டே எப்பொழுதும் நமது ஜெபங்களை ஆரம்பித்து முடிக்கவேண்டும். ஆனால் மத்தியில், நாம் முக்கியம் என உணர்வதைப் பொறுத்திருக்கும். சிலவேளைகளில் நமது பரலோகப் பிதாவுக்கு நன்றி செலுத்தலிலேயே நமது அதிகமான ஜெபத்தை செலவழித்திட நாம் விரும்புவோம். மற்ற வேளைகளில் நமது அதிகமான ஜெபத்தில் அவரது உதவிக்காகக் கேட்பதில் செலவழித்திட நாம் விரும்பலாம்.



### தனிப்பட்ட ஜெபங்கள்

ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் தனியாக ஒரு தடவையாவது ஜெபிக்கவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் பேசத் தொடங்கிய உடனேயே தனிஜெபங்கள் செய்யக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களோடுகூட முழங்காற்படியிட்டு ஒன்றின்பின் ஒன்றாக வாக்கியங்களை அவர்களைத் திரும்பவும் சொல்ல வைப்பதன் மூலம் எவ்வாறு ஜெபிப்பதென்று பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கலாம். சீக்கிரத்திலேயே பிள்ளைகள் தங்கள் சொந்த ஜெபங்களை செய்யக் கற்றுக்கொள்வார்கள்.

### குடும்ப ஜெபங்கள்



ஒவ்வொரு குடும்பமும் தினமும் குடும்ப ஜெபம் செய்யவேண்டும். முழுக் குடும்பமும் ஒன்றுசேர்ந்து முழங்காற்படியிடுகின்றனர். குடும்பத்தலைவர் ஜெபம் செய்கிறார் அல்லது ஒரு குடும்ப அங்கத்தினரை ஜெபத்தை ஏறெடுக்குமாறு கேட்கிறார். ஜெபம் ஏறெடுப்பதற்கு

ஒவ்வொருவருக்கும் முறையான வாய்ப்புக் கிடைக்கவேண்டும். தங்களுடைய பெற்றோரின் உதவியால் சிறுபிள்ளைகள் அவர்களது முறைகளை எடுத்துக்கொள்ளலாம். எவ்வாறு ஜெபிப்பதென்று போதிப்பதற்கும் தேவனில் விசுவாசம் கொள்ளல், தாழ்மை, மற்றும் அன்பு போன்ற கொள்கைகளைப் பிள்ளைகளுக்கு போதிப்பதற்கும் குடும்ப நேரம் மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும்.

***விசேஷித்த ஜெபங்கள்***

தேவன் எப்பொழுதும் அவர்களுடைய ஜெபங்களைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறார் என பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். தங்களுடைய வழக்கமான தனி மற்றும் குடும்ப ஜெபங்களுடன் விசேஷித்த உதவி தேவைப்படும்போதோ அல்லது நன்றியுணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகிறபோதோ எந்நேரத்திலும் அவர்கள் ஜெபிக்கலாம்.

***உணவை ஆசீர்வதித்தல்***



தனது குடும்ப அங்கத்தினர்கள் அவர்கள் உணவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்திடவும் சாப்பிடுவதற்கு முன்பு அதை ஆசீர்வதித்திடும்படி அவரிடம் கேட்கவும் கற்றிருக்கின்றனர் என்பதை பெற்றோர் கவனிக்க வேண்டும். இளம் பிள்ளைகள் உட்பட ஒவ்வொரு நபரும், ஆசீர்வாதத்தை ஏறெடுக்க முறைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். உணவை ஆசீர்வதிப்பதற்காக ஜெபம் ஏறெடுப்பது நமது பரலோகப் பிதாவுக்கு நன்றியுடையவர்களாயிருக்க பெற்றோரும் பிள்ளைகளும் கற்றுக் கொள்ள உதவுகிறது.

## குடும்ப இல்ல மாலை நேரம்

சமீபத்தில் திருமணமான தம்பதியர், பிள்ளைகளுடன் தகப்பன்மார்கள் மற்றும் தாய்மார்கள், துணைவரில்லாதிருக்கும் பெற்றோர்களுடன் உள்ள பிள்ளைகள், வீட்டில் பிள்ளைகளில்லாத பெற்றோர்கள், குடும்ப இல்ல மாலை நேரக் குழுக்களிலுள்ள திருமணமாகாத வயதுவந்தோர் மற்றும் தனியாகவோ அல்லது அறைத் தோழர்களுடனோ வாழுகிறவர்களையும் சேர்த்து குடும்ப இல்ல மாலை நேரம் எல்லோருக்குமானது ஆகும். தங்களின் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் குடும்ப இல்ல மாலை நேரத்தை நடத்துவதால் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். குடும்ப இல்ல மாலை நேரத்திற்காக குடும்பங்கள் ஒன்றாயிருக்கும்படியாக சபையானது திங்கள் மாலை நேரங்களை பிற நிகழ்ச்சிகள் ஏதுமின்றி வைத்திருக்கிறது.



பிரதான தலைமை சொன்னதாவது: “நீங்கள் கர்த்தருடைய ஆலோசனையைப் பின்பற்றி, வழக்கமாக குடும்ப இல்ல மாலை நேரங்களை நடத்தினால் பெரிதான ஆசீர்வாதங்களை உங்களுக்கு வாக்குறுதியளிக்கிறோம். சபையிலுள்ள பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு சுவிசேஷக் கொள்கைகளைக் கற்பித்து, சிறப்பாக கடைப்பிடிக்க தங்களது பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள் என நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். இந்த முக்கியமான பொறுப்பில் கருத்தாயிருந்திட தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக”. (“பிரதான தலைமையிடமிருந்து செய்தி”. குடும்ப இல்ல மாலை நேர ஆதாரப் புத்தகம் [*1983*], iv).

தனது குடும்பத்தின் கோத்திரத் தலைவனாக, குடும்ப இல்ல மாலை நேரத்தில் தகப்பன் தலைமை தாங்குகிறார். தகப்பனில்லாதபோது, தாய் தலைமை தாங்குகிறார். குடும்ப இல்ல மாலை நேரத்தை பெற்றோர்கள் நடத்துகிறார்கள் அல்லது நடத்தும்படி குடும்ப அங்கத்தினர் ஒருவரை நியமிக்கிறார்கள். அவர்கள் பாடத்தைக் கற்பிக்கிறார்கள் அல்லது கற்பிக்க போதுமான வயதுடைய பிள்ளைக்கு கற்றுக்கொடுக்க அதிகாரமளிக்கிறார். போதுமான வயதுடைய ஒவ்வொருவருக்கும் பங்கெடுக்கும் வாய்ப்புகளை அளிக்கவேண்டும். பாடல் நடத்துதல், வேதவசனங்களை மேற்கோள் காட்டுதல், கேள்விகளுக்குப் பதிலளித்தல், படங்களைப் பிடித்துக்கொள்ளுதல், சிற்றுண்டிகள் பரிமாறுதல், மற்றும் ஜெபித்தல் போன்ற வழிகளில் சிறுபிள்ளைகள் உதவலாம்.

குடும்ப இல்ல மாலை நேரத்துக்குரிய ஆலோசனை கூறப்பட்ட ஒரு குறிப்பு பின்வருமாறு:

- ஆரம்பப் பாடல் (குடும்பத்தினரால்)
- ஆரம்ப ஜெபம் (குடும்ப அங்கத்தினர் ஒருவரால்)
- கவிதை அல்லது வேதவாசிப்பு (குடும்ப அங்கத்தினர் ஒருவரால்)
- பாடம் (தகப்பனால், தாயால் அல்லது ஒரு வளர்ந்த பிள்ளையால்)
- விளையாட்டு நிகழ்ச்சி (எல்லா குடும்ப அங்கத்தினர்களும் பங்கெடுத்துக் கொள்ளுதலோடு ஒரு குடும்ப அங்கத்தினர் வழிநடத்தல்)
- நிறைவுப் பாடல் (குடும்பத்தினரால்)
- நிறைவு ஜெபம் (குடும்ப அங்கத்தினர் ஒருவரால்)
- சிற்றுண்டிகள்

அநேக பிற வழிகளிலும் ஒரு குடும்பம் குடும்ப இல்ல மாலை நேரத்தை நடத்தலாம். குடும்பத்தை ஒன்றாய்க் கொண்டுவருகிற, ஒருவருக்கொருவர் தங்களது அன்பைப் பலப்படுத்துகிற பரலோக பிதாவிடம் அவர்களை கிட்டிச் சேர்க்க உதவுகிற மற்றும் நீதியாய் வாழ அவர்களை ஊக்குவிக்கிறதான எந்த நிகழ்ச்சியும் குடும்ப இல்ல மாலை நேர நிகழ்ச்சியாயிருந்திட முடியும். வேதங்களை வாசித்தல், சுவிசேஷத்தைக் கலந்துரையாடுதல் சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளுதல், ஒரு சேவைத் திட்டம் செய்தல், ஒன்றாய்ச் சேர்ந்து பாடுதல், சுற்றுலா செல்லுதல் குடும்பமாய் ஒரு விளையாட்டு விளையாடுதல் மற்றும் மலை யேறுதல் போன்ற இம்மாதிரியான நிகழ்ச்சிகள் உதாரணங்களாகும். எல்லா குடும்ப இல்ல மாலை நேர நிகழ்ச்சிகளும் ஜெபத்தை உடையதாய் இருக்கவேண்டும்.

குடும்ப இல்ல மாலை நேர பாடங்களானது, வேதங்கள், பிற்காலத் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள், குறிப்பாக பொது மாநாட்டு செய்திகள், தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் சாட்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இருந்திடலாம். அநேக பாடங்கள் இரட்சகரின் பிறப்பு, ஜீவியம், போதனைகள் மற்றும் பாவநிவர்த்தி இவைகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். *சுவிசேஷக் கொள்கைகள், சுவிசேஷ அடிப்படைகள், விசுவாசத்திற்கு உண்மையாயிருத்தல் வாலிபர்களின் பலத்திற்காக,* மற்றும் *சபை பத்திரிகைகள்,* குடும்ப இல்ல மாலை நேர பாடங்களின் பகுதியாயிருக்கக்கூடிய அநேக தலைப்புகளின் மீதான குறிப்புகளையும் மற்ற விவரங்களையும் கொண்டிருக்கின்றன.

குடும்ப இல்ல மாலை நேர நிகழ்ச்சிக்காக ஆலோசனையளிக்கப்பட்ட கலந்துரையாடல் தலைப்புகள் பின்வருமாறு:

- இரட்சிப்பின் திட்டம்
- இயேசுவின் ஜீவியமும் போதனைகளும்
- மனந்திரும்புதல்
- ஜெபம்
- உபவாசம்
- ஞானவார்த்தை
- கர்த்தரின் நல்லொழுக்கத் தரம்
- திருவிருந்தின் அர்த்தம்
- தசமபாகம்
- நன்றியுணர்வு
- நேர்மை
- தேவன் மீது பயபக்தி மற்றும் அவரது சிருஷ்டிப்புக்களுக்கான மரியாதை
- ஞானஸ்நானம், ஆசாரியத்துவ நியமனம், அல்லது திருமணம் ஆகியவற்றிற்காக ஆயத்தம் செய்தல்
- ஆலயத்திற்குச் செல்ல ஆயத்தப்படுதல்
- வேதங்களை வாசித்தல்

- ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரித்தல்
- பிறரை மன்னித்தல்
- சாட்சியைப் பெற்றுக்கொள்ளுதலும் பகிர்தலும்
- பிறரோடு சுவிசேஷத்தைப் பகிர்தல்
- குடும்ப வரலாறுகளைத் திரட்டுதல்
- மரணத்தைப் புரிந்துகொள்ளுதலும் ஏற்றுக்கொள்ளுதலும்
- குடும்ப பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல்
- குடும்ப வரவு செலவுகளை நிர்வகித்தல்
- வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளுதல்
- இசையைப் பாராட்டுதலும் ரசித்தலும்

## விடுமுறைகளும் விசேஷ சமயங்களும்

விடுமுறைகள் மற்றும் விசேஷ சமயங்களான கிறிஸ்து பிறப்பின் நாள்; உயிர்த்தெழுந்த நாள்; ஆசாரியத்துவ மறுஸ்தாபிதத்தின் ஆண்டு விழா, மாநாடுகள், ஊழியத்துக்காக குடும்ப அங்கத்தினர் செல்லுதல், அல்லது பிறப்பு, ஞானஸ்நானம், அல்லது ஒரு குடும்ப அங்கத்தினரின் நியமிப்பு போன்றவை சுவிசேஷத்தின் சத்தியங்களை போதித்திடக்கூடிய மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும்.

## தசமபாகங்களும் காணிக்கைகளும்



தசமபாக நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படியும், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு தகுதியாயிருக்கும்படியும், கர்த்தர் தனது ஜனங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார். (மல்கியா 3:8-11 பார்க்கவும்).

தசமபாகம் மற்றும் காணிக்கைகளின் நியாயப்பிரமாணத்தைப் போதித்திட பெற்றோருக்கு மிகச்சிறந்த சமயமானது, அவர்கள் தங்களுடைய தசமபாகத்தையும் காணிக்கைகளையும் செலுத்தும் சமயமே. தங்கள் பெற்றோர்கள் செய்திடுவதை பார்ப்பதன் மூலம் பிள்ளைகள் ஏவுகை செய்யப்படுகிறார்கள். உதவிப்பணம் பெறும் பிள்ளைகள் அதிலே தசமபாகம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் மூன்று சேமிப்பு பெட்டிகள் வைத்திருக்கலாம். தசமபாகத்துக்காக ஒன்று, ஊழியத்துக்காக ஒன்று, மற்றும் செலவழிக்கும் பணத்துக்காக ஒன்று. பிள்ளைகள் பணத்தைப் பெறும் ஒவ்வொரு தடவையும்,

*முதலில் 10 சதவீதத்தை தசமபாக பெட்டியிலும் பின்பு கொஞ்சம் தொகையை ஊழிய பெட்டியிலும், மீதமுள்ளதை செலவு பண பெட்டியிலும் போட கற்றுக் கொள்ளவேண்டும்.*

*பிள்ளைகள் தசமபாக பணத்தை செலுத்தும்பொழுது தசமபாக படிவத்தை நிரப்பி, அதை பணத்துடன் ஒரு உறைக்குள் போட்டு தங்களது கிளைத்தலைமை அல்லது ஆயத்தின் அங்கத்தினர் ஒருவரிடம் கொடுக்க அல்லது அனுப்ப பெற்றோர்கள் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒதுக்குப்புறங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் அவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ தலைவரிடம் தசமபாகத்தைக் கொடுக்கவேண்டும்.*

## *உணவுநேர கலந்துரையாடல்கள்*

*சுவிசேஷத்தைப்பற்றி பேசுவதற்குரிய நல்ல தருணங்கள் உணவு வேளைகளாக இருந்திடலாம். சிறுபிள்ளைகள் சுவிசேஷ சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்கவும் பதிலளிக்கவும் விரும்புவர். அவர்களுக்குப் பதில் தெரியாதபோது தகப்பன் அல்லது தாய் சுருக்கமாக விடைகளை அளித்து சுவிசேஷத்தைக் கற்றுக்கொடுக்கலாம். ஒவ்வொரு உணவுவேளையும் சுவிசேஷக் கலந்துரையாடலைக் கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை ஆனால் ஒரு வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று வேளைகள் அதுபோன்ற கலந்துரையாடல் இருக்குமாயின் அது சுவிசேஷத்தைக் கற்றுக்கொள்ள குடும்பத்துக்கு உதவும்.*

## *படுக்கை நேரக் கதைகள்*

*அநேகமாக குழந்தைகள் படுக்கை நேரக் கதைகளை விரும்புகின்ற காரணத்தால் வேதங்களிலிருந்தும் சபை வெளியீடுகளிலிருந்தும் கதைகளை வாசிப்பது அல்லது சொல்வது மூலமாக அல்லது சொந்த அனுபவங்களைச் சொல்வது மூலமாக சுவிசேஷத்தைப் போதிப்பதற்குரிய ஒரு மிகச் சிறந்த வாய்ப்பை அவைகள் அளிக்கின்றன. நேர்மை,பகிர்தல், மற்றும் இரக்கம் இவற்றைக் குறித்த கதைகள் முக்கிய சுவிசேஷக் கொள்கைகளை போதிக்கின்றன.*

## *ஒன்றுசேர்ந்து வேலை செய்தல்*



*இல்லச் சூழலில் குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து வேலைசெய்கையில் சுவிசேஷத்தைப் போதிப்பதற்குரிய பல சந்தர்ப்பங்கள் எழுகின்றன. உதாரணமாக வீட்டைச் சுத்தம் செய்யும்*

பொழுது அல்லது முற்றத்திலோ தோட்டத்திலோ வேலை செய்யும் பொழுது பெற்றோர்கள் சுவிசேஷத்தைப்பற்றி பேசிடும்படியான வாய்ப்புகளுக்கு விழிப்புடன் இருக்கவேண்டும். ஒரு பிள்ளை அடிக்கடி கேள்விகள் கேட்கும். பெற்றோர்கள் எப்பொழுதும் எளிதான விடைகளைக் கொடுக்க நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். “நீ ஒரு நல்ல உழைப்பாளி. உன்னைக் குறித்து பரலோக பிதா பெருமை கொள்கிறார் என நான் நிச்சயமாயிருக்கிறேன்” அல்லது “பரலோக பிதா சிருஷ்டித்திருக்கிற அழகான மேகங்களைப் பார்” போன்ற விமர்சனங்கள் பிள்ளைகளுக்கு பரலோக பிதாவிடத்தில் ஒரு நன்றி உணர்வையும் அவர் உண்மையிலேயே இருக்கிறார் என்ற ஒரு நிச்சயத்தையும் அளிக்கக்கூடும்.

## குடும்ப ஆலோசனை



குடும்ப அங்கத்தினர்களை ஒரு குடும்ப ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றாய்க் கூடும்படியாக பெற்றோர் ஏற்பாடு செய்யலாம். குடும்ப இலக்குகளை ஏற்படுத்தவும் குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் பொருளாதார நிலைபற்றி விவாதிக்கவும், திட்டங்கள் மேற்கொள்ளவும் ஒருவரையொருவர் தாங்கி பலப்படுத்தவும் சாட்சி பகரவும் மற்றும் ஒருவருக்கொருவர் ஜெபிக்கவும் இந்தக் கூட்டத்தை குடும்பங்கள் உபயோகிக்கலாம். தேவைப்படும் பொழுதெல்லாம் கூட்டம் நடத்தலாம்.பெற்றோர் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் அல்லது குடும்ப இல்ல மாலை நேரத்தோடு சம்பந்தப்பட்டதிலும் குடும்ப ஆலோசனைக் கூட்டத்தை நடத்த விரும்பலாம். பிறருடைய கருத்துக்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் மதிப்புக்கொடுப்பது, குடும்ப கூட்டங்களின் வெற்றிக்கு அத்தியாவசியமாயிருக்கிறது.

## தனிப்பட்ட நேர்காணல்கள்



வழக்கமாய் ஒவ்வொரு குழந்தையோடும் தனிப்பட்ட நேர்சந்திப்புகள் செய்வது தங்களது பிள்ளைகளிடத்தில் நெருங்கியிருக்கவும், அவர்களை

ஊக்கப்படுத்தவும், மற்றும் சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதிக்கவும் தகப்பன்மார்களுக்கு உதவுகிறது என்று அநேக பெற்றோர் உணர்கின்றனர். அம்மாதிரியான நேர்முக சந்திப்புகள் சம்பிரதாயமாயோ அல்லது சம்பிரதாயமற்றோ மற்றும் அடிக்கடி நடத்தப்படுகிறதாகவோ இருக்கலாம்.

பிள்ளைகளிடத்தில் தனது அன்பையும் தன்னம்பிக்கையையும் தகப்பன் வெளிப்படுத்தவேண்டும், மற்றும் எந்த விஷயத்தையும் குறித்த தன்னுடைய உணர்ச்சிகளை பிரச்சினைகளை அல்லது அனுபவத்தை வெளிப்படுத்தும்படியான சந்தர்ப்பத்தை அந்த பிள்ளை, பெறவேண்டும். தகப்பன் மிகக் கவனமாக கவனமாக செவிசாய்த்து பிள்ளையினுடைய பிரச்சினைகளையும், அந்தரங்கங்களையும் மிகக் கவனமாக எடுத்துக்கொள்ளவேண்டும். தகப்பனும் பிள்ளையும் ஒன்றாகச் சேர்ந்து ஜெபித்திட விரும்பலாம். நேர்முக சந்திப்பிலிருந்து எழுகிற பிரச்சினைகள் பிற குடும்ப அங்கத்தினர்களையும் சம்பந்தப்படுத்தியிருந்தால் அடுத்து வருகிற குடும்ப இல்லமாலை நேரத்தின்போது அவைகளைக் கையாளலாம்.

## குடும்ப நிகழ்ச்சிகள்

முழுக்குடும்பமும் அடிக்கடி ஒன்றாகச் சேர்ந்து காரியங்களைச் செய்திடக்கூடிய காலத்தினை பெற்றோர் திட்டமிடவேண்டும். சுற்றுலாக்கள், முகாம், குடும்ப திட்டங்கள், இல்லம் மற்றும் சுற்றுப்புற வேலை, நீச்சல், மலையேறுதல் மற்றும் ஆரோக்கியமான திரைப்படங்கள் மற்றும் பிற பொழுதுபோக்குகள் போன்றவை குடும்பங்கள் ஒன்றாக இருந்து அனுபவிக்கின்ற பல நிகழ்ச்சிகளில் சிலவாகும்.

ஒன்றாகச் சேர்ந்து நிகழ்ச்சிகளை அனுபவிக்கின்ற குடும்பம், பெரிதான அன்பையும் அந்நியோன்யத்தையும் உணரும். தங்களுடைய பெற்றோரோடு நெருங்கி இருக்கிறோம் என பிள்ளைகள் உணரும்போது அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு செவிசாய்க்கவும் மற்றும் அவர்கள் அறிவுரைகளைப் பின்பற்றவும் அதிகமாக முன்வருவார்கள். பெற்றோர்களும் மிகுந்த பலனுள்ளதாய் சுவிசேஷத்தைக் கற்றுக்கொடுக்க முடியும்.



# குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்



*எல்லா ஜனமும் கிறிஸ்துவிடம் வரும்படி உதவுவதே கர்த்தருடைய சபையின் ஊழியமாயிருக்கிறது. குடும்பங்கள்:*

1. *தங்களுடைய சொந்த ஆவிக்குரிய மற்றும் சரீரத் தேவைகளை அளித்தும், மற்றும் பிறருடைய தேவைகளைச் சந்திக்க உதவும்பொழுதும்.*

2. *பிறரோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும்போதும்,*

3. *குடும்ப அங்கத்தினர்கள் ஆலய நியமங்களைப் பெற்றுக்கொள்கின்றனரா எனப் பார்த்து, இந்த ஆசீர்வாதங்களை மரித்த தங்களுடைய பூர்வத்தாருக்கும் கிடைக்க உதவும் பொழுதும் இந்த ஊழியத்தை நிறைவேற்ற உதவலாம்.*

## ஆவிக்குரிய மற்றும் சரீரத் தேவைகள்

### ஆவிக்குரிய தேவைகள்

இந்த வழிகாட்டிப் புத்தகத்தின், “இல்லத்தில் சுவிசேஷத்தைக் கற்பித்தல்” என்ற முந்தைய பிரிவானது எவ்வாறு குடும்பங்கள் தங்களது ஆவிக்குரிய தேவைகளுக்கென்று அளிக்க முடியும் என்பதைக் குறித்த தகவலைக் கொண்டுள்ளது.

### சரீரத் தேவைகள்

குடும்பங்கள் சுயசார்புடையவர்களாய் மாறிட வேண்டும், இதினிமித்தம் அவர்கள் தங்களுக்குரிய சொந்த சரீரத்தேவைகளுக்கென்று அளித்து பிறருக்கும் உதவலாம்.

சுயசார்புடையவர்களாய் இருந்திட, குடும்ப அங்கத்தினர்கள் வேலை செய்ய மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும். வேலை என்பது சரீர, மன அல்லது ஆவிக்குரிய முயற்சியாகும். அதுவே ஆற்றல், சந்தோஷம், சுய கௌரவம் மற்றும் செழிப்பு இவற்றின் ஆதாரமாய் இருக்கிறது. சுயசார்புடையவர்களாய் இருந்திட பெற்றோர்கள் கடின முயற்சி செய்து, தங்கள் பிள்ளைகளும் அப்படியிருக்க வேண்டுமென கற்பிக்க வேண்டும். சுயசார்புடையவ ராய் இருத்தலானது தேவையிலுள்ளோருக்கு உதவிடும்படி அவர்களை தகுதியாக்கும்.

தந்தையர்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அளிக்கவும் மற்றும் தங்களுடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை பெற்றிருக்கிறார்கள். தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளை போஷிப்பதற்கான அடிப்படை பொறுப்பினை உடையவர்களாயிருக்கிறார்கள். சுத்தமான வீடு, நல்ல உணவு, உடை, மருத்துவம் மற்றும் பல் பாதுகாப்பு, கல்வி கற்கும் வாய்ப்புகள், நிதி ஆதாரங்களை நிர்வகித்தலின் ஆலோசனை, மற்றும் கூடுமானால், தங்களுக்குரிய சில சொந்த உணவுப்பொருட்களை எவ்வாறு பயிரிடுவதென்ற பயிற்சி, போன்றவை குடும்பத்துக்கு இருக்கிறதென்று பெற்றோர் கவனித்துக் கொள்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அவர்களுடைய உணவை எவ்வாறு தயாரிப்பதென்றும், அதைப் பிற்கால உபயோகத்திற்காக எவ்வாறு பத்திரப்படுத்துவது என்றும் கற்பிக்கவேண்டும்.

இந்த சரீரத்திற்குரிய தேவைகளை அளித்திட பெற்றோர்கள் மனமுவந்து கடினமாக உழைத்திட வேண்டும். “அவர்கள் தங்கள் பிள்ளைகள் பட்டினியாயும் நிர்வாணிகளாயும் போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்” (மோசியா 4:14 பார்க்கவும்). சுகவீனப் படுகையில் ஆபத்துக் காலங்களில், வேலையில்லா நேரத்தில், அல்லது பிற நெருக்கடிகள் ஏற்படும் நேரங்களில் குடும்பத் தேவைகளுக்குரியவற்றை அளித்திட பெற்றோர்கள் திட்டமிடவும் ஆயத்தம் செய்யவும் வேண்டும். தனது குடும்பத்தின் சரீர தேவைகளுக்குரியவற்றை அளித்திட தகப்பனுக்கு கடினமாயிருந்தால், மேலும் பிற குடும்ப அங்கத்தினர்கள் உதவ இயலாதவர்களாயிருந்தால், அவர் ஆசாரியத்துவ தலைவர்கள் மூலம் உதவியை நாடலாம்.

தங்கள் பெற்றோருக்கு அவர்களுடைய வேலையில் உதவுதல், பள்ளியில் நன்றாகப் படித்தல், தங்களுடைய உடை மற்றும் பிற உடைமைகளை கவனமுடன் வைத்திருத்தல், தங்களையும், தங்களுடைய வீட்டையும் சுத்தமாக மற்றும்ஒழுங்காக வைத்திருத்தல் மற்றும் நல்ல ஆரோக்கியத்தை பராமரித்தல் போன்றவைகளின் மூலம், பிள்ளைகள் தங்கள் குடும்பங்களின் லௌகீகத் தேவைகளை அளிப்பதில் உதவலாம்.

*குடும்ப அங்கத்தினர்கள் வாசிக்க, எழுத, மற்றும் அடிப்படை கணிதம் செய்ய தங்கள் திறமையை அபிவிருத்தி செய்து அறிவைப் பெறவும் திறமைகளை விருத்தி செய்திடவும், ஒவ்வொரு வாய்ப்பையும் அனுகூலப் படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் ஞானவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிட வேண்டும். எங்கு இயலுமோ அங்கே, ஜீவியத்தைத் தாங்கிக் கொள்ளத் தேவையான அடிப்படைப் பொருட்களின் ஒரு வருடத்திற்குரிய கையிருப்பை அல்லது முடிந்த அளவு சாத்தியமானதை, குடும்பங்கள் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். குடும்ப அங்கத்தினர்கள் தேவையற்ற கடனைத் தவிர்க்கவேண்டும், எதிர்காலத்திற்கென சேமிக்கவேண்டும், தங்களுடைய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றவேண்டும் மற்றும் வீணாக்குவதைத் தவிர்த்து, தங்களுடைய வருவாய்களை ஞானமாய் பயன்படுத்தவேண்டும்.*

*பிறரோடு பகிர்ந்துகொள்ள, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும். எவ்வளவு குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, ஒவ்வொருவரும் ஏதாவதொன்றைக் கொடுக்கலாம். ஒவ்வொரு மாதமும் உபவாசம் இருப்பதன் மூலம் உபவாச காணிக்கைகளைக் கொடுப்பது தேவையுள்ளோருக்கு உதவிடக்கூடிய ஒரு வழியாகும். அவை பசியுற்றோரைப் போஷிக்கவும், உறைவிடமற்றோருக்கு அடைக்கலம் கொடுக்கவும், ஆடையில்லாதோர்க்கு ஆடை கொடுக்கவும், மற்றும் உபத்திரவப்படுவோரை மீட்கவும் பயன்படுத்தப்படுகிறது. பிறருக்கு நாம் உதவும்பொழுது கர்த்தருக்கு நமது அன்பை காட்டுகிறோம். அவர் சொன்னார், "மிகவும் சிறியவராகிய என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40).*

## சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்



*பிறரோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்திட, சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கடமையிருக்கிறதென கர்த்தர் தம்முடைய பிற்காலத் தீர்க்கதரிசிகளின் மூலம் போதித்திருக்கிறார். "எச்சரிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தன் அயலானை எச்சரிக்க கடமைப்பட்டிருக்கிறான்" (கோ.உ 88:8 பார்க்கவும்). "நாம் ஞானஸ்நானம் பெற்றபின், எல்லா நேரங்களிலும், எல்லா காரியங்களிலும், எல்லா*

இடங்களிலும் தேவனுக்கு சாட்சிகளாக நிற்கும்படி மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும் என மார்மன் புத்தகத்திலுள்ள ஆல்மா தீர்க்கதரிசி விவரிக்கிறான்" (மோசியா 18:9 பார்க்கவும்).

குடும்ப அங்கத்தினர்கள், தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலாகத்தாருக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்பற்றியும், அவர்களுடைய வாழ்க்கையிலே அது கொண்டுவருகிற ஆசீர்வாதங்களைப்பற்றியும் கற்றுக்கொள்ளும்படி உதவிட தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யவேண்டும். சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்வதின் மூலம், பெற்றோர்களும் பிள்ளைகளும் தங்களுடைய சொந்த சாட்சிகளை பலப்படுத்தலாம் மற்றும் பிறருக்கும் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரலாம்.

- எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதன் மூலம் நல்ல எடுத்துக்காட்டுகளாய் இருந்திடலாம் (மத்தேயு 5:16 பார்க்கவும்).
- சபையிலுள்ள தங்களுடைய அங்கத்தினரத்துவத்துக்காக நன்றியுடையவர்களாய் இருந்திடலாம் (ரோமர் 1:16 பார்க்கவும்) மற்றும் தங்களை அங்கத்தினர்கள் என பிறர் அறிந்துகொள்ளும்படி செய்யலாம்.
- அறிமுகமானவர்களிடம், சபையைப்பற்றி அதிகமாக அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்களா எனக் கேட்கலாம்.
- சுவிசேஷத்தைக் கேட்கத் தயாராயிருக்கிற தனிநபர் அல்லது குடும்பத்தை, தெரிந்தெடுக்க தங்களுக்கு உதவிடும்படி கர்த்தரிடம் விண்ணப்பிக்கலாம்.
- குடும்பம் அல்லது தனிநபரை, குடும்ப இல்ல மாலைநேரம் அல்லது சபைக் கூட்டம் அல்லது நிகழ்ச்சிக்கு அழைத்தல், வாசிப்பதற்கு அவர்களுக்கு சபை புத்தகங்களை அல்லது கைப்பிரதிகளைக் கொடுத்தல் அல்லது சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப்பற்றி அவர்களோடு பேசுதல் போன்ற ஏதாவதொரு வழியின் மூலம் சபைக்கு அறிமுகப்படுத்தலாம்.
- ஊழியர்களால் போதிக்கப்பட தங்களுடைய இல்லத்துக்கு அந்த குடும்பத்தையோ அல்லது தனிநபரையோ அழைக்கலாம்.

பெற்றோர்கள் தங்களையும் தங்களது பிள்ளைகளையும் முழுநேர ஊழியம் செய்யும்படியான ஆயத்தம் செய்யும் பொறுப்பினைப் பெற்றுள்ளார்கள். பிள்ளைகளை முக்கியமாக புதல்வர்களை ஆயத்தமாக்கிட, பெற்றோர்கள் இல்லத்திலே சுவிசேஷத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தனிப்பட்ட மற்றும் குடும்ப வேதவாசிப்பையும் ஜெபங்களையும் கொண்டிருக்க வேண்டும், மற்றும் சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்வதன் ஆசீர்வாதங்களையும் பொறுப்புகளையும் பற்றி அடிக்கடி பேசவேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு,

ஊழியங்களுக்காக பணம் சேர்த்திட வும், கடினமாக உழைக்கவும், சுய சார்புடையவர்களாய் இருந்திடவும் மற்றும் பிறரை நேசித்து அவர்க ளுக்கு ஊழியம் செய்யவும் போதிக்க லாம்.

## ஜீவிக்கின்ற மற்றும் மரித்தோ ருக்கான ஆலய நியமங்கள்



ஆலயங்களில், தகுதியுள்ள சபை அங் கத்தினர்கள், பரிசுத்த நியமங்களைப் பெற்று தேவனோடு உடன்படிக்கை களுக்குள் பிரவேசிப்பார்கள். தங்க ளுடைய மரித்த பூர்வத்தாருக்காக வும் கூட நியமங்களின் பணியில் அவர்கள் பங்கேற்பார்கள். சாத்திய முள்ள இடத்தில், தகப்பனும் தாயும் இருவரும் தங்களுடைய ஆசாரியத்து வத் தலைவர்களிடமிருந்து ஆலய சிபாரிசைப் பெற்று தங்கள் சொந்த ஆலய நியமங்களைப் பெற்றிட ஆல யத்துக்குச் செல்லவேண்டும். அவர்க ளுக்கு ஆலயத்துக்குச் செல்ல இயல வில்லையெனில், அவர்கள் ஆலய சிபாரிசின்படி தகுதியாய் வாழ வேண்டும்.

ஆலய நியமங்களைப் பெறாமலே மரித்துப்போன தங்களது பூர்வத்தா ருக்காக ஆலய நியமங்கள் நிறைவேற் றப்படுகின்றன என நிச்சயித்திடும்படி யான பரிசுத்த பொறுப்பு குடும்பங்க ளுக்கு உண்டு. தங்களுடைய சொந்த நியமங்களைப் பெற்றிருக்கின்ற சபை அங்கத்தினர், தங்களுடைய பூர்வத்தா ருக்காக நியமங்களை நிறைவேற்றும் படி நேரம், சந்தர்ப்பம் மற்றும் ஆலய அருகாமை ஆகியன அனுமதிக்கிற படி அடிக்கடி ஆலயத்துக்குத் திரும் பச் செல்லவேண்டும்.

ஆசீர்வாதங்கள், ஞானஸ்நானங்கள், நியமிப்புகள், திருமணங்கள், மரணங் கள் ஆகியவற்றின் சான்றிதழ்கள், முக் கியமான கடிதங்கள், புகைப்படங் கள், செய்தித்தாள் கத்தரிப்புகள், போன்ற பிற விவரங்கள் ஆகியவை உள்பட, தங்களுடைய வாழ்க்கையி லும் தங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் உள்ள முக்கியமான நிகழ்ச்சிகளின் எழுதப்பட்ட குறிப் பேடுகளை தகப்பன்மார்களும் தாய் மார்களும் சேகரிக்கவேண்டும், அவர் கள் தங்களுடைய சொந்த தனிப் பட்ட வரலாறுகளைத் தொகுத்து ஒவ் வொரு குடும்ப அங்கத்தினர்களையும் வரலாறை வைத்திருக்க ஊக்கப்படுத் தவேண்டும். சிறுபிள்ளைகள் தங்களு டைய சொந்த வரலாறுகளை ஆரம் பிக்க அவர்களுக்கு உதவவேண்டும்.

குடும்பங்கள், தங்கள் பூர்வத்தாரைக் குறித்த தகவல்களைத் திரட்டி, அதைக் குடும்ப வரலாற்றுடன் தொகுக்கவேண்டும், அவர்கள் தங்களது சமீபத்திய நான்கு தலைமுறைகளுக்கான தகவல்களைத் திரட்டவேண்டும்.

## தலைமைக்கான பயிற்சி



பெற்றோர், மூன்று அடிப்படை குடும்பக் கடமைகளைப் புரிந்து அவைகளைச் செய்யும்படியாக பிணைய, ஊழிய, அல்லது சேகரத்தின் வழிநடத்துதலின்படி, ஆசாரியத்துவ தலைவர்களும், உபகுழுத் தலைவர்களும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். (பக்கம் 23–25 பார்க்கவும்). தங்கள் குடும்பங்களை எவ்வாறு வழிநடத்துவது என தகப்பன்மார்களுக்கும் தாய்மார்களுக்கும் தலைவர்கள் கற்றுக் கொடுக்கவேண்டும். புறம்பான ஒரு பகுதியில் ஒரு குடும்பம் இருந்தால், ஊழிய, சேகர, அல்லது பிணையத் தலைவர்கள், அந்த பெற்றோர் தங்களு டைய பொறுப்புகளைக் கற்று நிறைவேற்றுகிறார்களா என கண்காணித்திட வேண்டும்.

# இல்லத்தில் ஆராதனை நடத்துதல் (புறம்பான பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்காக)



புறம்பான பகுதிகளில் வாழ்கிற சில குடும்பங்கள் தொகுதி அல்லது கிளைக் கூட்டங்களில் ஒழுங்காக கலந்துகொள்ள முடியாமற்போகிறது. பிணைய, ஊழிய, அல்லது சேகர தலைவரிடமிருந்து அதிகாரத்துடன் அத்தகைய குடும்பங்கள் தங்கள் இல்லத்திலேயே ஞாயிறு கூட்டத்தை நடத்தவேண்டும். சபை அங்கங்கள் ஸ்தாபிக்கப்படாத பகுதிகளில், பிரதேச அதிகாரிகளின் அனுமதி குடும்பங்களுக்கு வேண்டும்.

தகப்பனோ அல்லது தகுதியான ஆசாரியத்துவம் தரித்த வேறொருவரோ, தகுதியுள்ளவராகவும், ஆரோனிய ஆசாரியத்துவத்திலே ஓர் ஆசாரியராகவும் அல்லது மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தைத் தரித்தவராகவும் மற்றும் தன்னுடைய ஆசாரியத்துவ தலைவர்களிடமிருந்து அனுமதிபெற்றவராகவும் இருப்பாராயின் அவர் திருவிருந்தை ஆயத்தம் செய்து ஆசீர்வதிக்கலாம். ஆசாரியத்துவத்தைத் தரித்திருக்கிற எவரும் திருவிருந்தைப் பறிமாறலாம். திருவிருந்து பரிமாறதலுக்குரிய அறிவுரைகள் இந்த வழிகாட்டி புத்தகத்தின் பக்கம் 21–23ல் உள்ளது.

ஞாயிறு ஆராதனைக் கூட்டம் எளிமையாகவும், பயபக்தியுள்ளதாகவும், கனம்பொருந்தியதாயும் இருந்திடல் வேண்டும். அது கீழ்க்கண்டவைகளைக் கொண்டவையாயிருக்கலாம்.

1. ஆரம்பப் பாடல்

2. ஆரம்ப ஜெபம்

3. திருவிருந்து ஆசீர்வதித்தலும் பரிமாறுதலும்

4. பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகள்:

   - ஒன்று அல்லது இரண்டு சுருக்கமான பிரசங்கங்கள் அல்லது சாட்சிகள்
   - குடும்பமாக வேதவாசிப்பும் கலந்துரையாடலும்
   - குடும்ப அங்கத்தினர் ஒருவரால் ஒரு பாடம்

5. நிறைவு பாடல்

6. நிறைவு ஜெபம்

ஞாயிறு ஆராதனைக் கூட்டத்துக்கு திட்டம் செய்வதில் தகப்பனானவர், கர்த்தரின் ஆவியின் வழிநடத்துதலை நாடி, பின்பற்றவேண்டும். மார்மன் புத்தக ஜனங்கள் இவ்வித ஆராதனையைக் குறித்த ஒரு மாதிரியை காண்பித்தார்கள். “ஆவியின் கிரியைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஆகியவைகளுக்கேற்ப அவர்களுடைய கூட்டங்கள்... நடத்தப்பட்டன; ஏனெனில் பிரசிங்கிக்கவோ, அல்லது புத்தி சொல்லவோ, அல்லது ஜெபிக்கவோ, அல்லது விண்ணப்பம் பண்ணவோ அல்லது பாடவோ, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்களை எப்படி நடத்துகிறதோ அப்படியே அங்கு செய்யப்பட்டது. (மரோனி 6:9 பார்க்கவும்).

குடும்பம் தங்களுடைய அடிப்படை வழிகாட்டியாக வேதங்களை பயன்படுத்தவேண்டும். பொதுமாநாட்டுச் சொற்பொழிவுகள், சுவிசேஷ அடிப்படைகள், சுவிசேஷக் கொள்கைகள், விசுவாசத்திற்கு உண்மையாயிருத்தல், வாலிபர்களின் பெலத்திற்காக, ஊழிய கைப்பிரதிகள், சபைப் பத்திரிகைகள், மற்றும் சபையின் பிற வெளியீடுகள் மற்றும் ஒளி ஒலி நாடாக்களையும் கூடுதலாக அவர்கள் பயன்படுத்தலாம்.

தகுதியான ஆசாரியத்துவத்தைக் கொண்டவர் ஒருவரும் குடும்பத்தில் இல்லையெனில், தகப்பன் அல்லது தாய் குடும்ப அங்கத்தினர்களை பாடல்கள் பாடவும், வேதங்களை வாசிக்கவும், ஜெபிக்கவும், ஒவ்வொருவருடனும் மற்றும் பரலோக பிதாவுடனும் கிட்டிச் சேரவும் ஒன்றாக கூட்டிச் சேர்க்கலாம். குடும்பத்துக்கென்று நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ தலைவர், அந்தக் குடும்பம் திருவிருந்தில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களை அவ்வப்போது ஏற்பாடு செய்திடவேண்டும்.

மலையேறுதல், சுற்றுலா செல்லுதல், நல்ல திரைப்படங்கள், உறவினரைச் சந்தித்தல், விளையாட்டுகள், இசை நிகழ்ச்சி மற்றும் நீச்சல் போன்ற வாராந்திர நிகழ்ச்சிகளை பெற்றோர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

தசமபாகம், உபவாசக் காணிக்கைகள் மற்றும் இதர கொடைகளைத் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ தலைவரிடம் குடும்பம் கொடுக்கவேண்டும்.

குடும்பங்கள், சபைக்கு எந்த எழுத்து மூலமான அறிக்கையையும் சமர்ப்பிக் கிறதில்லை, ஆனால் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ தலைவர், குடும்ப நலனைப்பற்றி விசாரித்தலில் தகப்பனை ஒழுங்காக பேட்டி காண்கிறார். அவசியப்படுகிற இடங்களில் தலைவர்கள் இந்த பேட்டிகளை தொலைபேசி மூலமாய் நடத்தலாம்.

# ஆசாரியத்துவ நியமங்களும் ஆசீர்வாதங்களும்



கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஆசாரியத்துவ நியமங்கள் பரிசுத்த கிரியைகளாயிருக்கின்றன மற்றும் ஆசாரியத்துவ அதிகாரத்தின் மூலமாய் நிறைவேற்றப்படுகின்றன. சுகமளிக்கவும், தேற்றவும் மற்றும் ஊக்கப்படுத்தவும் ஆசாரியத்துவ ஆசீர்வாதங்கள் ஆசாரியத்துவ அதிகாரத்தால் அளிக்கப்படுகின்றன. நியமங்களையும் ஆசீர்வாதங்களையும் நிறைவேற்றுகிற சகோதரர்கள், சுவிசேஷக் கொள்கைகளின்படி வாழ்வதன் மூலம் தங்களை ஆயத்தப்படுத்தி, பரிசுத்த ஆவியானவரின்மூலம் வழிநடத்தப்பட்டிட உண்மையாய் உழைக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு நியமத்தையும் ஆசீர்வாதத்தையும் கண்ணியத்துடன் நிறைவேற்றவேண்டும் மற்றும் கீழ்வரும் தேவைகளுக்கு இணக்கமாய் இருக்கவேண்டும். நியமங்களானது:

1. அது இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவேற்றப்படவேண்டும்.
2. ஆசாரியத்துவ அதிகாரத்தின் மூலமாய் நிறைவேற்றப்பட வேண்டும்.
3. குறிப்பிட்ட பிரத்தியேகமான வார்த்தைகள் உபயோகித்தல், அல்லது பரிசுத்தமாக்கப்பட்ட எண்ணெய் உபயோகித்தல் போன்ற ஏதேனும் தேவையான செயல் முறைகளோடு நிறைவேற்றப்பட வேண்டும்.
4. தேவைப்பட்டால், முறையான திறவுகோல்களைத் தரித்திருக்கிற, நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ

தலைவர் மூலமாக அது அதிகாரம ளிக்கப்படவேண்டியதிருக்கிறது.

*பிள்ளைகளுக்கு பெயர் சூட்டல் மற்றும் ஆசீர்வாதம் அளித்தல்; ஞானஸ்நானம் கொடுத்தல் மற்றும் திடப்படுத்தல், ஆசாரியத்துவம் அளித்தல் மற்றும் ஆசாரியத்துவ அலுவலுக்கு நியமித்தல் திருவிருந்து ஆசீர்வதித்தல் மற்றும் பரிமாறுதல் மற்றும் கல்லறைகளைப் பரிசுத்தப்படுத்துதல் ஆகிய நியமங்களுக்கு ஆசாரியத்துவ தலைவரது அதிகாரம் தேவைப்படுகிறது.*

ஒரு நியமத்தில் அல்லது ஆசீர்வாதம் கொடுப்பதில் ஏராளமான சகோதரர்கள் பங்கெடுக்கும்போது, ஒவ்வொருவரும் அவரது இடது பக்கமிருக்கும் சகோதரரின் தோளின்மீது தனது இடது கையை மென்மையாக வைக்கிறார். உதவிக்காக, ஆசாரியத்துவத்தை தரித்திருப்பவர்களை பெருமளவில் அழைப்பது ஊக்கமளிக்கப்படுவதில்லை.

இந்தப் பிரிவில் விளக்கப்பட்டுள்ள நியமங்களும் ஆசீர்வாதங்களும், தகப்பன்மார்களுக்கு தங்களது குடும்பங்களில் கோத்திரத் தலைவர்களாக பணிபுரிந்திட உதவும்.

## குழந்தைகளுக்குப் பெயர் சூட்டலும் ஆசீர்வாதம் அளித்தலும்

*“கிறிஸ்துவினுடைய சபையில் பிள்ளைகளை உடைய ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் பிள்ளைகளை சபைக்கு முன்பதாக மூப்பர்களிடம் கொண்டுவரவேண்டும். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தங்களது கைகளை அவர்கள் மேல் வைத்து, இரட்சகருடைய நாமத்தில் அவர்களை ஆசீர்வதிக்கின்றனர்”* (கோ.உ *20:70*). இந்த வெளிப்பாட்டிற்கு இசைவாக பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுதல் மற்றும் ஆசீர்வாதம் அளித்தலில், மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்றிருக்கிற தகுதியுள்ள ஆண்கள் மட்டுமே பங்கேற்கலாம். பிள் ளைகளுக்கு பெயர் சூட்டி ஆசீர்வதித்தலின் நியமத்துக்கு தலைமை தாங்கும் அதிகாரியிடமிருந்து அதிகாரம் தேவைப்படுகிறது.



குழந்தையை ஆசீர்வதிக்கும்பொழுது மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தைப் பெற்றிருக்கிற ஆண்கள் வட்டமாக சூழ்ந்து நின்று தங்களது கைகளை அந்தக் குழந்தைக்கு கீழாக வைப்பர். ஒரு மூத்த குழந்தையை ஆசீர்வதிக்கும் பொழுது சகோதரர்கள் தங்களது கைகளை குழந்தையின் தலையின் மீது மென்மையாக வைப்பர். ஆசீர்வதிக்கிற நபரானவர்:

1. பரலோகப் பிதாவை நோக்கி விண்ணப்பிக்கிறார்.

2. மெல்கிசெதேக் ஆசாரியத்துவ அதிகாரத்தினாலே இந்த ஆசீர்வாதம் அளிக்கப்படுகிறதென உரைக்கிறார்.

3. பிள்ளைக்கு ஒரு பெயரை சூட்டுகிறார்.

4. ஆவியானவர் வழிநடத்துகிற பிரகாரம் ஓர் ஆசாரியத்துவ ஆசீர்வாதத்தை அளிக்கிறார்.

5. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

## ஞானஸ்நானம்



தலைமை தாங்கும் அதிகாரமுடையவருடைய வழிநடத்துதலின் கீழ், ஓர் தகுதியுள்ள ஆசாரியரோ அல்லது மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்றிருக்கிற ஒரு நபரோ ஒருவருக்கு ஞானஸ்நானம் நிறைவேற்றலாம். அவ்வாறு செய்வதற்கு அவர்:

1. ஞானஸ்நானம் பெறப்படும் நபருடன் தண்ணீருக்குள் நிற்கிறார்.

2. சௌகரியம் மற்றும் பாதுகாப்புக்காக, அந்த நபருடைய வலதுகை மணிக்கட்டை தனது இடது கையால் பிடிக்கிறார். ஞானஸ்நானம் பெறுகிறவர் ஞானஸ்நானம் கொடுக்கிறவரின் இடதுகை மணிக்கட்டை தனது இடதுகையால் பிடிக்கிறார்.

3. தனது வலது கரத்தை விரித்து மேலே உயர்த்துகிறார்.

4. நபருடைய முழுப்பெயரையும் உரைத்து "இயேசு கிறிஸ்துவினால் அதிகாரமளிக்கப்பட்டவனாய் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமேன்" (கோ.உ 20:73) என சொல்கி றார்.

5. சௌகரியத்துக்காக அந்த நபர் தனது மூக்கை வலது கையால் பிடிக்கும்படி செய்கிறார்; ஞானஸ்நானம் கொடுக்கிறவர் தனது வலது கரத்தை அந்த நபரின் பின்புறம் உயரமாக வைத்து, நபரின் ஆடை உள்பட முழுவதுமாக நபரைத் தண்ணீருக்குள் மூழ்கச் செய்கிறார்.

6. தண்ணீரை விட்டு மேலே வெளியே வர அந்த நபருக்கு உதவுகிறார்.

இரண்டு ஆசாரியர்கள் அல்லது மெல்கிசெதேக் ஆசாரியத்தும் பெற்றிருக்கிற ஆண்கள் ஒவ்வொரு ஞானஸ்நானமும் சரியான முறையில் கொடுக்கப்படுகிறது என்று நிச்சயிக்கும்படி சாட்சியாக இருக்கிறார்கள். கோட்பாடும் உடன்படிக்கைகளும்

*20:73*ல் கொடுக்கப்பட்டிருக்கிறது போல வார்த்தைகள் சரியாகச் சொல் லப்படவில்லையென்றாலோ, அல் லது நபரின் சரீரம் அல்லது ஆடை யின் ஒருபகுதி முழுவதுமாகத் தண் ணீருக்குள் மூழ்காமல் போனாலோ ஞானஸ்நானம் மறுபடியும் கொடுக் கப்பட வேண்டும்.

## திடப்படுத்துதல்



ஒன்பது வயதுள்ளவர்களும் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுமாகிய மனந்திரும்பினவர்களையும் எட்டு வயதுள்ளவர்களாயிருந்து தங்கள் பெற்றோர்கள் இருவரும் அங்கத்தின ரல்லாதிருக்கிற மனந்திரும்பினவர்க ளையும், திருவிருந்து கூட்டத்தில் திடப்படுத்தப்படுகிறார்கள் (கோ.உ *20:41*) பார்க்கவும். எட்டு வயது பிள் ளைகளின் பெற்றோர் ஒருவராகிலும் சபை அங்கத்தினராய் இருந்து, ஞானஸ்நானத்திற்கும், திடப்படுத்த லுக்கும் பெற்றோர் இருவரும் அனு மதி வழங்கினால், அப்பிள்ளைகள் ஞானஸ்நானத்தைப் பெற்ற பிறகு, ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட இடத்திலேயே உடனடியாக திடப்ப டுத்தப்படலாம். கிளைத் தலைமை அல்லது ஆயத்தின் வழிநடத்துதலின் கீழ் மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்ற ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட ஆண்கள் இந்த நியமத்தை நிறைவேற்றலாம். அவர்கள் தங்கள் கரங்களை அந்த நபரின் தலையின் மீது மிருதுவாக வைப்பர். பின்பு இந்த நியமத்தை நிறைவேற்றுகிறவர்:

1. நபரின் முழுப்பெயரையும் உரைக் கிறார்.
2. மெல்கிசெதேக் ஆசாரியத்துவத் தின் அதிகாரத்தினால் இந்த நிய மம் நிறைவேற்றப்படுகிறது என உரைக்கிறார்.
3. அந்த நபரை, பிற்காலப் பரிசுத்த வான்களின் இயேசு கிறிஸ்து சபை யின் ஒரு அங்கத்தினர் என திடப்ப டுத்துகிறார்.
4. “பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்” என்று சொல்வதன் மூலம் பரிசுத்த ஆவியின் வரத்தை அருளு கிறார்.
5. ஆவியானவர் வழிநடத்துகிற பிர காரம் ஆசாரியத்துவ ஆசீர்வா தத்தை அளிக்கிறார்.
6. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

## ஆசாரியத்துவத்தை அருளு தல் மற்றும் ஆசாரியத்துவ அலுவலுக்கு நியமித்தல்

*ஆரோனின் ஆசாரியத்துவம் அருளு தலையும் உதவிக்காரர், போதகர், மற்றும் ஆசாரியர் அலுவலுக்கு நிய மித்தல்களையும் ஆயர் அல்லது கிளைத் தலைவர் மேற்பார்வையிடுகி றார்.* ஆரோனிய ஆசாரியத்துவ அலு வலில் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு முன், ஆயர் அல்லது கிளைத்தலைவ ரால் அவர் நேர்முகப் பேட்டி எடுக் கப்பட்டு தகுதியானவர் என்று காணப்படவேண்டும். அதோடு கூட ஒரு திருவிருந்துக் கூட்டத்தில் அவர் ஆதரிக்கப்படவேண்டும். ஆரோனிய ஆசாரியத்துவத்தை கிளைத் தலைவ ரின் மற்றும் ஆயரின் அனுமதியு டன், மற்றொருவர் மீது ஆரோனிய ஆசாரியத்துவம் அருளி, ஆரோனிய ஆசாரியத்துவ அலுவல் ஒன்றில் அவரை நியமிக்கலாம்.



*மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் அருளுதலையும் மற்றும் மூப்பர் மற்றும் உயர் ஆசாரியர் அலுவல்களுக்கு நியமித்தலையும் பிணைய அல்லது ஊழியத் தலைவர் மேற்பார்வையிடுகிறார்.*

ஆசாரியத்துவத்தை அருள அல்லது ஆசாரியத்துவ அலுவலுக்கு ஒரு நபரை நியமித்திட, தேவையான ஆசாரியத்துவத்தைத் தரித்தும் தலைமை தாங்கும் அதிகாரமுடைய வரால் அதிகாரம்பெற்றுமிருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்கள் தங்களுடைய கரங்களை மிருதுவாக அந்த நபரின் தலையின் மேல் வைப்பர். நியமத்தை நிறை வேற்றுகிறவர்:

1. நபரை அவரது முழுப்பெயரால் அழைக்கிறார்.
2. எந்த அதிகாரத்தால் இந்த நியம னம் செய்யப்படுகிறது என உரைக் கிறார் (ஆரோனிய அல்லது மெல் கிசெதேக் ஆசாரியத்துவம்).
3. ஆரோனிய மற்றும் மெல்கி செதேக் ஆசாரியத்துவம் முன்பு அருளப்படவில்லையெனில் அதை அருளுகிறார்.
4. ஆரோனிய மற்றும் மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்திலுள்ள அலுவ லுக்கு நபரை நியமித்து அந்த அலு வலுக்குரிய உரிமைகளையும், வல் லமைகளையும் மற்றும் அதிகாரத் தையும் அளிக்கிறார்.
5. ஆவியானவர் வழிநடத்துகிற பிர காரம் ஓர் ஆசாரியத்துவ ஆசீர்வா தத்தை அளிக்கிறார்.
6. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவுசெய்கிறார்.

## திருவிருந்து

திருவிருந்து என்பது மிகவும் பரிசுத்தமான ஒரு நியமமாகும். திருவிருந்தில் பங்கேற்றலானது இயேசு கிறிஸ்துவின் ஜீவியம், போதனைகள் மற்றும் பாவநிவர்த்தி இவைகளை நினைவு கூர்ந்திட வாய்ப்பை அளிக்கிறது. ஞானஸ்நானத்தின்போது கர்த்தரோடு செய்த உடன்படிக்கைகளை புதுப்பிக்கக்கூடிய நேரம் அதுவே (மோசியா 18:8-10 பார்க்கவும்).



போதகர்களும், ஆசாரியர்களும் திருவிருந்தை ஆயத்தப்படுத்தலாம், ஆசாரியர்கள் அதை ஆசீர்வதிக்கலாம்; உதவிக்காரர்களும், போதகர்களும் மற்றும் ஆசாரியர்களும் அதைப் பரிமாறலாம். மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தைத் தரித்திருக்கும் சகோதரர்கள், திருவிருந்தை ஆயத்தப்படுத்தி, ஆசீர்வதித்துப் பரிமாறலாம். ஆனால் மிகச் சில ஆரோனிய ஆசாரியத்துவ சகோதரர்கள் இருக்கும்போது வழக்கமாக அவர்களாலேயே இது நடத்தப்படுகிறது. ஒருவர் மிகவும் கடுமையான பாவத்தைச் செய்திருந்தால், அவர் மனந்திரும்பி, அவரது கிளைத் தலைவருடன், இந்தக் காரியத்தைச் சரி செய்யும்வரை, திருவிருந்தை அவர் ஆயத்தப்படுத்தவோ, ஆசீர்வதிக்கவோ அல்லது பரிமாறவோ கூடாது.

திருவிருந்தை ஆயத்தம் செய்கிற, ஆசீர்வதிக்கிற, அல்லது பரிமாறுகிறவர்கள் கர்த்தரின் சார்பாக பிறருக்கு இந்த நியமத்தை நிர்வகிக்கிறார்கள். இந்த ஆசாரியத்துவத்தை தரித்துள்ள ஒவ்வொருவரும் பரிசுத்தமான மற்றும் பயபக்தியுள்ள மனநிலையுடன் இந்த நியமத்தை அணுக வேண்டும். அவர் மிகவும் நேர்த்தியாக, சுத்தமான மற்றும் கண்ணியமாக ஆடையை அணிந்திருக்க வேண்டும். தனிப்பட்ட தோற்றம் நியமத்தின் பரிசுத்தத் தன்மையை பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டும்.

திருவிருந்தை ஆயத்தப்படுத்தும் சகோதரர்கள், கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் அதைச் செய்யவேண்டும். சுத்தமான அப்பத் தட்டுகளில் பிட்கப்படாத அப்பங்களையும் சுத்தமான தண்ணீருள்ள திருவிருந்து கிண்ணங்கள் கொண்ட தட்டுக்களையும், திருவிருந்து மேஜையில் அவர்கள் வைக்கிறார்கள். அப்பத்தையும், தண்ணீரையும் சுத்தமான ஒரு வெள்ளைத் துணியால் அவர்கள் மூடுகிறார்கள்.

திருவிருந்து துதிப்பாடலின்போது, திருவிருந்து மேஜையில் பொறுப்பாயிருப்பவர்கள், அப்பத்தட்டின் மீதிருந்து துணியை விலக்கி, அப்பங்களை சிறு துண்டுகளாகப் பிட்கிறார்கள். துதிப்பாடலுக்குப் பிறகு, அப்பத்தை ஆசீர்வதிக்கிறவர்

முழங்காற்படியிட்டு, அப்பத்திற்கான திருவிருந்து ஜெபத்தை ஏறெடுக்கிறார். அங்கிருப்பவர்களுக்கு பயபக்தியாக, ஒழுங்கான முறையில், சகோதரர்கள் அப்பத்தை பரிமாறுகிறார்கள். கூட்டத்தை தலைமைதாங்கும் அதிகாரமுள்ளவர், முதலில் திருவிருந்தைப் பெறுகிறார். அங்கிருக்கும் ஒவ்வொருவரும் அப்பம் பரிமாறுதலில் பங்கெடுக்கும் வாய்ப்பைப் பெற்றபின், அதைப் பரிமாறியவர்கள், அவர்களது தட்டுக்களை, திருவிருந்து மேஜைக்கு திரும்பக் கொண்டுபோகிறார்கள். திருவிருந்தை ஆசீர்வதிக்கிறவர்கள், அப்பம் பரிமாறப்பட்டு முடிந்தவுடனேயே, மீண்டும் அந்தத் தட்டுகளை துணியால் மூடுகின்றனர்.

திருவிருந்து மேஜையில் பொறுப்பாயிருப்பவர்கள், தண்ணீருள்ள, தட்டுக்களின் மேலுள்ள துணியை விலக்குகிறார்கள். தண்ணீரை ஆசீர்வதிப்பவர், முழங்காற்படியிட்டு, திருவிருந்து ஜெபத்தை ஏறெடுக்கிறார். பின்னர் அங்கிருப்பவர்களுக்கு, சகோதரர்கள் தண்ணீரைப் பரிமாறுகிறார்கள். மீண்டும் தண்ணீர் திருவிருந்து மேஜைக்குக் கொண்டுபோகப்பட்டு மீண்டும் துணியால் மூடப்படுகிறது. திருவிருந்தை ஆசீர்வதித்து, பரிமாறும் சகோதரர்கள், பின்னர், சபையோருடன் தங்கள் இருக்கையில் அமருகிறார்கள்.

திருவிருந்தென்பது, பிள்ளைகளையும் சேர்த்து சபை அங்கத்தினர்களுக்கே. அங்கத்தினர்களுக்கு மட்டுமே அது பரிமாறப்படுமென கூட்டத்தை நடத்துபவர் அறிவிக்கக்கூடாது; அங்கத்தினரல்லாதோர் அதில் பங்கெடுப்பதை எந்த வகையிலும் தடுக்கக் கூடாது.

திருவிருந்து ஜெபங்கள் தெளிவாகவும், திருத்தமாகவும் மற்றும் கண்ணியமுடனும் சொல்லப்படவேண்டும். திருவிருந்தை ஆசீர்வதிக்கிற நபர் வார்த்தையில் பிழை செய்து அதை அவரே சரிசெய்யாவிட்டால் ஆயர் அல்லது கிளைத் தலைவர் ஜெபத்தை மீண்டும் சொல்லவும் அதைச் சரியாக அளிக்கவும் அவரைக் கேட்க வேண்டும்.

அப்பத்துக்குரிய ஜெபம் பின்வருமாறு:

நித்திய பிதாவாகிய தேவனே, இந்த அப்பத்தில் பங்கெடுக்கிற யாவருடைய ஆத்துமாக்களுக்காகவும், அவர்கள் உம்முடைய குமாரனுடைய சரீரத்தின் நினைவுகூருதலில் புசிக்கவும், அவருடைய ஆவியை அவர்கள் எப்பொழுதும் தங்களோடே கொண்டிருக்கும்படி உம்முடைய குமாரனுடைய நாமத்தை தங்கள் மீது எடுத்துக்கொள்ளவும், அவரை எப்பொழுதும் நினைவுகூரவும், தங்களுக்கு அவர் கொடுத்திருக்கிற அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவும் மனமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நித்திய பிதாவாகிய தேவனே, உம்மிடத்தில் சாட்சி பகரவும், இதை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்துமாறு உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

ஆமேன்." (கோ.உ 20:77 மற்றும் மரோனி 4).

தண்ணீருக்குரிய ஜெபம் பின்வருமாறு:

நித்திய பிதாவாகிய தேவனே, இந்த தண்ணீரை பானம் பண்ணுகிற யாவருடைய ஆத்துமாக்களுக்காகவும், அவர்களுக்காக சிந்தப்பட்ட உமது குமாரனுடைய இரத்தத்தின் நினைவுகூருதலில் அவர்கள் இதைச் செய்யவும், அவருடைய ஆவியை அவர்கள் தங்களோடு கொண்டிருக்கும்படி அவரை எப்பொழுதும் நினைவுகூருகிறார்கள் என்று நித்திய பிதாவாகிய தேவனே, உம்மிடத்தில் அவர்கள் சாட்சி பகரவும், இதை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்துமாறு உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமேன்." (கோ.உ 20:79 மற்றும் மரோனி 5).

கூட்டம் முடிந்தபிறகு கூடிய விரைவில் மேஜையிலிருந்து திருவிருந்தை அகற்றிவிடவேண்டும். ஏதேனும் அப்பம் மீந்திருந்தால் அதை உணவாக பயன்படுத்தலாம்.

*திருவிருந்து ஆசீர்வதித்தல் மற்றும் பரிமாறுதலுக்கு தலைமை தாங்கும் அதிகாரமுடையவர்களிடமிருந்து அதிகாரம் தேவைப்படுகிறது.*

## எண்ணெயைப் புனிதம் செய்தல்

சுத்தமான ஒலிவ எண்ணெயை, பிணியாளிகளையோ உபத்திரப்பட்டிருப்போரையோ அபிஷேகிக்கும்படியான அதனுடைய பரிசுத்த நோக்கத்திற்கென மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தைத் தரித்த ஒருவர் (அல்லது அநேகர்) பிரதிஷ்டை செய்கிறார். எண்ணெயைப் பிரதிஷ்டை செய்பவர்:

1. ஒலிவ எண்ணெய் உடைய ஒரு திறந்த புட்டியை கையில் பிடிக்கிறார்.
2. நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி விண்ணப்பிக்கிறார்.
3. மெல்கிசெதேக் ஆசாரியத்துவ அதிகாரத்தினால் அவர் செயல்படுகிறார் என உரைக்கிறார்.
4. எண்ணெயை பிரதிஷ்டை செய்து (புட்டியை அல்ல) பிணியாளியையும் உபத்திரப்படுவோரையும் அபிஷேகிப்பதற்காக அதை பரிசுத்தமாக்குகிறார்.
5. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

## பிணியாளிகளுக்குச் சகாயம் செய்தல்

மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் உடைய ஆண்கள் மட்டுமே பிணியாளிகள் அல்லது உபத்திரவப்படுவோருக்காக சகாயம் செய்யலாம். சாதாரணமாக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் ஒன்றாக சேர்ந்து சகாயம் செய்வர். ஆனால் தனியாகக்கூட ஒருவர் அதைச் செய்யலாம். பிரதிஷ்டை செய்யப்பட்ட எண்ணெய் கிடைக்கவில்லையெனில்,

மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் உடைய ஒருவர் ஆசாரியத்துவ அதிகாரத்தினால் ஆசீர்வாதத்தைக் கொடுக்கலாம்.



மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்றிருக்கிற தகப்பன் தனது குடும்பத்தில் வியாதியாயிருக்கிற அங்கத்தினர்களுக்குச் சகாயம் செய்யவேண்டும். அவர் மெல்கிசெதேக் ஆசாரியத்துவம்பெற்ற மற்றொருவரை தனக்கு உதவிடும்படி கேட்கலாம்.

பிணியாளிகளுக்குச் சகாயம் செய்தல் இரு பகுதிகளைக் கொண்டது:
(1) எண்ணெயால் அபிஷேகித்தல்
(2) அபிஷேகத்தை முத்தரித்தல்.

### எண்ணெயால் அபிஷேகித்தல்

மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தை பெற்றிருக்கிற ஒருவர் வியாதியாயிருக்கிற நபரை அபிஷேகிக்கிறார். அவ்வாறு செய்வதற்கு, அவர்:

1. பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு துளி எண்ணெயை அந்த நபரின் தலையின்மேல் வைக்கிறார்.
2. தனது கைகளை மிருதுவாக அந்த நபரின் தலையின்மீது வைத்து, அந்த நபரை அவருடைய முழுப்பெயரால் அழைக்கிறார்.
3. மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தினால் அவர் அந்த நபரை அபிஷேகிக்கிறார் என உரைக்கிறார்.
4. பிணியாளிகளையும், உபத்திரப்படுவோரையும் அபிஷேகித்து ஆசீர்வதிக்கும்படியாகபிரதிஷ்டை செய்யப்பட்ட எண்ணெயால் தாம் அபிஷேகிப்பதாக உரைக்கிறார்.
5. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

### அபிஷேகத்தை முத்தரித்தல்

வழக்கமாக மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்றிருக்கிற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள், சுகவீனமாய் இருக்கிற நபரின் தலைமீது தங்கள் கைகளை மிருதுவாக வைப்பர். அம்மனிதர்களில் ஒருவர் அபிஷேகத்தை முத்தரிக்கிறார். அவ்வாறு செய்வதற்கு அவர்:

1. அந்த நபரை அவருடைய அல்லது அவளுடைய முழுப்பெயரால் அழைக்கிறார்.
2. மெல்கிசெதேக் ஆசாரியத்துவ அதிகாரத்தால் இந்த அபிஷேகத்தை அவர் முத்தரிக்கிறார் என உரைக்கிறார்.
3. ஆவியானவர் நடத்துகிற பிரகாரமாக ஓர் ஆசீர்வாதத்தை அளிக்கிறார்.

4. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

## தகப்பனின் ஆசீர்வாதங்களும் ஆறுதல் மற்றும் ஆலோசனை கூறலின் பிற ஆசீர்வாதங்களும்



தகப்பனின் ஆசீர்வாதங்களும் பிற ஆசாரியத்துவ ஆசீர்வாதங்களும் ஆவியானவரால் வழிநடத்தப்படுகிற பிரகாரமாக வழிநடத்துதல் மற்றும் ஆறுதலை அளிக்கும்படி கொடுக்கப்படுகிறது.

மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தை பெற்றிருக்கிற ஒரு தகப்பன் தனது பிள்ளைகளுக்கு தகப்பனின் ஆசீர்வாதங்களைக் கொடுக்கலாம். இம்மாதிரியான ஆசீர்வாதங்கள் விசேஷமாக, பிள்ளைகள் வீட்டிலிருந்து வெளியே பள்ளிக்குச் செல்லும்போதும், ஊழியத்துக்குச் செல்லும்போதும், அல்லது அவர்கள் வேலை வாய்ப்பை ஆரம்பிக்கும்பொழுதும், திருமணம் புரிகிறபோதும், இராணுவ சேவையில் சேரும்போதும் அல்லது எதிர்பாராத தனிப்பட்ட சவால்களைச் சந்திக்கும்போதும் உதவியாயிருக்கும். இந்த ஆசீர்வாதங்கள் ஒரு குடும்பத்துக்கு பெரும் பெலனாக அமையலாம். குடும்பம், தகப்பனின் ஆசீர்வாதங்களை குடும்பக் குறிப்புகளில் குறித்துவைக்கலாம். ஆனால் அது சபைக் குறிப்பேடுகளில் பத்திரப்படுத்தப்படுகிறதில்லை. தேவையான நேரங்களில் தகப்பனின் ஆசீர்வாதங்களை நாட, பெற்றோர்கள் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

ஆறுதல் மற்றும் ஆலோசனை கூறலின் ஆசீர்வாதங்களை மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தை உடைய தகுதியுள்ள ஆடவர், தங்களுடைய மனைவிமார்கள், குடும்ப உறவு அங்கத்தினர்கள், மற்றும் அவற்றை வேண்டுகிற பிறருக்கும் கொடுக்கலாம்.

தகப்பனின் ஆசீர்வாதங்களையும், ஆறுதல் மற்றும் ஆலோசனை கூறலின் ஆசீர்வாதங்களையும் கொடுத்திட, மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தை உடைய ஒருவர் தனியாகவோ அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியுள்ள ஆடவர் தங்கள் கைகளை, ஆசீர்வாதம் பெறவிருக்கும் நபரின் தலைமீது மிருதுவாக வைப்பர். இது போன்ற ஆசீர்வாதங்களுக்கு எண்ணெய் எதுவும் அவசியமில்லை. ஆசீர்வாதம் கொடுக்கிறவர்:

1. அந்த நபரை அவருடைய முழுப்பெயரால் அழைக்கிறார்.
2. மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தின் அதிகாரத்தால் அவர் இந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார் என உரைக்கிறார்.

3. ஆவியானவர் நடத்துகிற பிரகாரமாக ஓர் ஆசீர்வாதத்தை கொடுக்கிறார்.

4. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவு செய்கிறார்.

## கல்லறைகளைப் பிரதிஷ்டை செய்தல்

கல்லறையைப் பிரதிஷ்டை செய்கிறவர் மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் பெற்றவராய் இருக்கவேண்டும் மற்றும் *ஆராதனையை வழிநடத்துகிற ஆசாரியத்துவ அலுவலரால் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.*

கல்லறையைப் பிரதிஷ்டை செய்திட, அவர்:

1. பரலோகப் பிதாவை நோக்கி விண்ணப்பிக்கிறார்.

2. மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தின் அதிகாரத்தால் அவர் அந்த கல்லறையைப் பிரதிஷ்டை செய்கிறார் என உரைக்கிறார்.

3. மரித்துப்போனவரின் சரீரத்துக்கு இளைப்பாறும் இடமாக அந்த அடக்கம் செய்த இடத்தை பிரதிஷ்டை செய்து பரிசுத்தப்படுத்துகிறார்.

4. அந்த இடம் உயிர்த்தெழுதல்வரை பரிசுத்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் இருக்கவேண்டும் என்று அவ்விடத்திற்குப் பொருத்தமானபடி ஜெபிக்கிறார்

5. குடும்பத்தாரை ஆறுதல்படுத்தும்படி கர்த்தரிடம் வேண்டி ஆவியானவர் நடத்துகிற பிரகாரம் பிற கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

6. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நிறைவுசெய்கிறார்.

குடும்பத்தார் விரும்பும் பட்சத்தில் ஓர் நபர் (கூடுமான மட்டும் மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் உடைய ஒரு மனிதர்) பிரதிஷ்டை ஜெபத்திற்குப் பதிலாக கல்லறை ஜெபம் ஒன்றை ஏறெடுக்கலாம்.

# சபைக்குரிய பொருட்களைப் பெறுதலும் குடும்ப வரலாற்றைப்பற்றிய தகவல்களைக் கண்டுபிடித்தலும்

உள்ளூர் தலைவர்களும், மற்ற அங்கத்தினர்களும் வேதங்களையும், கல்வி முறைகளையும், சபைப் பத்திரிகைகளையும், வஸ்திரங்கள் மற்றும் ஆலய உடைகளையும் உள்ளிட்ட சபைப் பொருட்களை தங்களது சபை விநியோக மையத்திலிருந்து அல்லது சால்ட் லேக் விநியோக மையத்திலுள்ள சேவை மையத்திலிருந்து அல்லது, சபையின் அதிகாரம் பெற்ற www.lds.org ல் அமைந்திருக்கும் இணைய தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

குடும்ப வரலாற்றைப்பற்றிய தகவல், சபையின் குடும்ப வரலாற்று இணைய தளமாகிய www.familysearch.org ல் கிடைக்கின்றன.

பிற்காலப்
பரிசுத்தவான்களின்
இயேசு கிறிஸ்து
சபை

TAMIL
4 02311 80418 4
31180 418